# கோபுரம்

## - விமலாதித்த மாமல்லன்

அவமானத்தின் அஸ்தமன நிழலாய், தலைமுறைகளைத் தாண்டி நீளவிருக்கும் அந்த சம்பவத்தை அன்று நடத்திவைக்கவே அந்தப் பாடல்பெற்ற கோவில் இருந்த சிற்றூரை நோக்கி அவனை விதி தள்ளிக் கொண்டு வந்து கொண்டிருந்தது என்பதை அந்த நாடோடிக் குருட்டு ஓவியன் அறிந்திருக்க இருந்த அற்ப சொற்ப வாய்ப்புகூட அந்த ஊர் மக்களுக்கு இருக்கவில்லை

திரித்து முறுக்கேறியிருந்தாலும் பிரிபிரியென கரடுமுரடாய் இருக்கும் திருஷ்டிக் கயிறு போல இருந்தான் அவன். அவனைப் போலவே தண்ணீரைப் பார்த்தறியாது வலது தோளில் நீளமாய் தொங்கிக்கொண்டு இருந்தது துணிப் பை. அதில் இருந்த அலுமினியத் தட்டும் நசுங்கிய குவளையும் சில கரித் துண்டுகளுமே அவனது உடமைகளாக இருந்தன. அநாமத்தாய் வளர்ந்த தாடியும் விழிகளற்ற குழிகளுமாகச் சேர்ந்து அவன் வயதைக் கூட்டிக் காட்டின. கூடவே, அவனது உயரம் காரணமாய் கூன் விழுந்தது போல வளைந்திருந்த முதுகும் சேர்ந்து கற்றுக்குட்டிப் புகைப்படக்காரனையும் கலைஞனையும் ஒருசேர கவரக்கூடிய வயோதிக வசீகரத்தை அவனுக்கு அளித்திருந்தன. அவன் அந்த ஊரின் எல்லையைத் தொடும்போதே உச்சியைக் கடந்துவிட்டிருந்தான் சூரியன். பிச்சைக்காரர்களையும் பைத்தியக்காரர்களையும் பார்த்ததும் காரணமற்ற தன்பயத்தில் குரைக்கும் நாய்கள் கூட அவன் ஊருக்குள் நுழையும்போதே கண்டும் காணாததுபோல ஒதுங்கி விலகின.

பாடப்பெற்ற பாடல்களின் கவித்துவ நயத்துக்காகவன்றி, பீடைகளை அகற்றும் ஸ்தலமாகவே பிரத்தி பெற்றிருந்தது அந்தச் சிற்றூர். கும்பாபிஷேகத்தின் பொருட்டு அன்று திருவிழாக்கோலம் பூண்டிருந்தது. சுற்றுபற்று ஊர்களிலிருந்து வந்து நெரித்துக் கொண்டிருந்தது கூட்டமான கூட்டம். பூர்வீக பந்தத்தின் வாசனையைத் தொலைத்துவிடாதிருக்க, தொலைதூர நகரங்களிலிருந்து தொப்புள்கொடி உறவுகளும் ஊர்க் கோயில் குலதெய்வ நேர்த்திக் கடன்பட்ட குடும்பங்களுமாக வந்து குழுமியிருந்தன. புராதன ஸ்தலத்தின் புராணம் மொழிபெயர்ந்து, புத்தகங்கள் வழி மொழியப்பட்டிருந்ததில் தூர தேச மிலேச்ச முகங்கள்கூட அங்குமிங்குமாய்த் தட்டுப்பட்டன.

மறுக்கப்பட்ட விழிகளுக்காகக் கடவுளுடன் ஆயுள் பரியந்தம் சமரிலிருப்பவன்போல, வழங்கப்பட்டிருந்த வாயை பசிக்கையில் புசிக்க மட்டுமே திறப்பதெனும் வைராக்கியம் அவன் மீது மௌனமாய்க் கவிந்திருந்தது. மேல் பார்வைக்கு, அனைவரையும் அருவெறுத்து ஒதுங்க வைத்த தோற்றத்துக்கு சற்றும் தொடர்பற்றதாய், அவன் கைகள் நிலத்தில் வெளிப்படுத்திய

வேகமும் நுட்ப விகசிப்பும் விஸ்வரூபமும், பாமர பாண்டித்ய பாரபட்சமின்றி, பார்ப்போரை வாய் பிளக்கவைக்கும் வல்லமை கொண்டதாய் இருந்தன. ஆழ் மனம் கண்ட தரிசன விகாசத்தை விரலிடைப்பட்ட கரித்துண்டுகள் வெளிப்படுத்தின. எதையும் பணத்தால் மட்டுமே அளக்கத் தெரிந்த மனித குலத்தில், ஏதுமற்ற இலவசக் கலைஞனின் இருப்புக்கு, எதிர்பார்ப்பின்மையே உத்தரவாதம். கை போன போக்கில் மனம் சலிக்கும்வரை கிறுக்கிக் கொண்டிருப்பதே அவன் காரியமாய் இருந்தது. சில சமயம் அவன் வரைந்தவை அனைவரும் வியக்கும்படியான ஓவியங்களாயின. சிலசமயம் எவருக்கும் புரியாத கிறுக்கல்களாகவும் எஞ்சி நின்றன. வரைந்து முடித்ததாய்த் தோன்றிய கணமே அவ்விடம் விட்டு அகன்று விடுவது வழக்கமாய்த் தொடங்கி, அதுவே அவனது வாழ்க்கையாகவும் ஆகிவிட்டிருந்தது.

தட்டும் குவளையும் பொதுவாகப் பசி தாகம் ஏற்படும்போது மட்டுமே பையை விட்டு வெளியில் எட்டிப் பார்த்தன. வரைந்து செல்லும் கரிக் கிறுக்கல்களின் மீது விசிறப்பட்டு விழும் காசுகளை அவன் ஒருபோதும் பொறுக்கியதில்லை. விசிறும் கரங்களுக்கு அதைப் பற்றியெல்லாம் என்ன விசாரம். வரையப்பட்ட படத்தைப் பார்த்த வியப்பிற்காய் சிலரும் ஊனத்தைப் பார்த்துப் பாவப்பட்டு சிலரும் தாம் செய்த ஏதேதோ பாவங்களுக்குப் பிராயச்சித்தமாய் சிலரும் வருங்கால வைப்புநிதியாய் புண்ணியம் தேடிக்கொள்ளச் சிலரும் எனப் பலரும் காசுகளை அவனது கரி ஓவியங்களின் மீது வீசிவிட்டுச் செல்வதே வாடிக்கை.

அவனது கால் போன போக்கில் அந்தச் சிற்றூர் வந்ததும் அந்த சமயமாய் பார்த்து அந்த ஊரின் பிரதான கோயிலில் திருவிழா நடந்துகொண்டு இருந்ததும் தற்செயலன்று என்பதைத் தின்பண்டக் கடைகளும் குழந்தைகளுக்கான விளையாட்டுச் சாதனங்களுமாய் எல்லையிலிருந்தே திமிலோகப்பட்டுக் கொண்டிருந்த அந்த ஊர் அறிந்திருக்கவில்லை.

கோயில் குடமுழுக்கு வைபவத்தை முன்னிட்டு ஏராளமான புரோகிதர்கள் வந்து குழுமியிருந்தனர். ஒரு வார காலமாகவே ஹோமகுண்டங்கள் முறைவைத்த ஓதலில் இடைவெளியின்றி ஓங்கி வளர்ந்த வண்ணம் இருந்தன. அந்த ஊரில் ஒரு வீட்டிலும் உலையே வைக்கப்படவில்ல. மூதாதைகள் கோயிலுக்கென்று எழுதிவைத்துவிட்டுப் போயிருந்த பூமி கொடுத்ததே மூன்று வேளையும் ஊருக்கே அன்னதானம் நடத்தப் போதுமானதாய் இருந்தது.

புத்தாடை பூண்டு அலங்கரித்துக் கொண்டிருந்த கூட்டம், திடீர்திடீரென மேலெழுந்த பக்திப் பரவசத்தில் எங்கிருந்தும் தெரிந்த கோபுரத்தை நோக்கிக் கை தூக்கி உணர்ச்சிப் பெருக்கீட்டில் உச்சக்

குரலில் கோஷமிட்டு வாழ்த்தியவண்ணம் அலையலையாய் கோவிலுக்குள் போவதும் வருவதுமாய் இருந்தது. அவ்வளவு நெரிசலிலும் எவரும் நசுக்கிவிடா வண்ணம் அழுக்கடைந்த அவனது ஆடைகளே அவனுக்குப் பாதுகாப்பு அரண் அமைத்துக் கொடுத்திருந்தன. அவனது நடைக்கேற்ற கதியில் கும்பல் ஊர்ந்ததா அல்லது கூட்டத்தின் நகர்வுக்கேற்ப அவன் நடந்தானா என்பதைத் தெளிவாய்க் கூறமுடியாதவாறு கோபுரத்தை நோக்கி தாமரை இலை நீர்த் திரளாய் அவனும் போய்க்கொண்டு இருந்தான். அவரவர் நிழல் அடுத்தவர் மீது மெல்ல தவழத் தொடங்கியிருந்தது. இருந்தும் வெயிலும் வெக்கையும் தணிந்தபாடில்லை.

கால்கள் சொறசொறத்ததை வைத்தே அதை சிமெண்டுப் பாதை என அறிந்துகொண்டவனாய் பக்கவாட்டில் நகர்ந்தான். அடர்ந்த மேகமொன்று அந்த ஊருக்கே குடைபிடிப்பது போல அப்போது பார்த்து வந்து நிற்கவே வெயிலின் உக்கிரம் சட்டெனத் தணிந்தது. கோபுரம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த கூட்டத்திலிருந்து விலகி மெல்ல ஒரு ஓரமாய் நகர்ந்து சம்மணமிட்டு அமர்ந்துகொண்டான். அவன் அமர தேர்ந்தெடுத்த இடம், தண்ணீர்ப் பந்தலுக்குப் பக்கவாட்டில் சற்றுத் தள்ளி இருந்தது. தோள்பையைப் பக்கத்தில் வைத்தவன், அதன் உள்ளிருந்து கரித்துண்டுகளை வெளியில் எடுத்து வைத்தான். அமர்ந்த நிலையிலிருந்த வண்ணமே கரிக்கோடுகளில் அவனது கை பரபரக்கத் தொடங்கிற்று. முதலில் சிறுவர்கள்தாம் அவனைச் சுற்றிக்கொண்டனர். அவன் வரையவரைய தரையானது சீலைபோல விரியத் தொடங்கிற்று. ஏதும் புரியாவிடினும் அவனது கையின் வேக விறுவிறுப்பின் லாகவத்தில் கரித்துண்டின் முனை கால்களருகில் வரவர சிறுவர்கள் விளையாட்டாய்க் கெக்கெலித்து விலகி விலகி திரைச்சீலையாய் அதை விரித்துக் கொண்டிருந்தனர். பெரியவர்களும் குவியத் தலைப்பட சுற்றிப் பெருங்கூட்டமாகிக் கொண்டிருந்தது. ஓவியமும் பெரும் கோபுரமாய் வளரத் தொடங்கிவிட்டிருந்தது. ஊர் கோபுரத்தில் கும்பாபிஷேகத்துக்காய்க் கட்டப்பட்டிருந்த கழி கட்டைகள் அவனது ஓவியத்தில் அகற்றப்பட்டிருந்தன. மற்றபடிக்கு, எதிரில் தெரிந்த கோபுரம் அவன் கையசைவில் தரையில் விழுந்த அதன் நிழலாய் பிரதிபலிப்பாய் அச்சு அசலாய் உருவாகி அனைவரையும் மூச்சடைத்து பிரமிக்க வைத்துக்கொண்டு இருந்தது. ஏழு அடுக்குகளாய் இருந்த கோபுரத்தின் ஒவ்வொரு அடுக்கிலிருந்த சிறுசிறு பொம்மைகளும்கூட அநாயாசத் தீற்றல்களாய் உயிர்பெற்றுக் கொண்டு இருந்தன. அவனை சரியாகக் கவனிக்கத் தவறிய ஓரிருவருக்கும் மற்றவர்கள் தம் கண்களைத் தொட்டு சைகையால் அவனது விழியின்மையைச் சுட்டிக் காட்டினர். நீண்ட உடுப்பணிந்த வெள்ளைக்காரியுடன் வந்திருந்த சட்டை அணியாத ஒரு வெள்ளைக்காரன் நீளமான புகைப்படக் கருவியைக்கொண்டு, உருவாகிக்கொண்டிருந்த ஓவியத்தைப் பகுதி பகுதியாய் அணுகியும் அகன்றும் வளைத்து வளைத்துப் படம் எடுத்துக்கொண்டு இருந்தான்.

கிட்டத்தட்ட கோபுரம் முழுமையாய் உருப்பெற்று எல்லோரையும் பரவசத்தில் ஆழ்த்திக்கொண்டிருந்த தருணத்தில், அடிவாரத்தில் நின்றபடி ஓவியத்தின் உச்சியையே சற்று நேரம் உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான். திடீரென கோபுரத்தின் கலசத்தை நோக்கி விறுவிறுவென ஓடினான். அடுத்து அவன் செய்த காரியம் கூடியிருந்த அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்கிற்று. உச்சியிலிருந்த கும்ப கலசத்தின்மீது குனிந்தவன், சுட்டு விரலையும் நடுவிரலையும் பட்டையாய் நீட்டி, கோணல் குறுக்காய் சரசரவெனக் கலைத்தபடி பரபரவெனப் பின்வாங்கி நடையும் ஓட்டமுமாய் ஓவியத்தின் கீழ்ப்பாகம்வரை வந்தான். கரியின் பிசிறுகூட இல்லாமல் சிமெண்ட்டுத் தரை பளிச்சிட கோபுரம் இரண்டாகப் பிளவுண்டு நின்றது.

கும்பாபிஷேகம் கோலாகலமாய் நடந்துகொண்டிருக்கையில் இது என்ன அபசகுனமாய் என அதுவரை அதிர்ச்சிக்குள்ளாகி நின்ற மக்களை அடுத்து அவன் செய்த காரியமே ஆத்திரமூட்டியது. கோபுரத்து பொம்மைகளில் வீணை வைத்திருந்த பொம்மையொன்றின் மார்பகத்தைத் தேய்த்து தேய்த்துப் பெரிய வட்டமாக்கினான். வீணையின் அடிப்பகுதியைக் கலைத்து மிகச் சிறியதாக்கினான். வெறிகொண்டவன் போல பரபரத்து இவற்றைச் செய்துகொண்டு இருந்தவன் வரைந்து முடித்ததும் ஆசுவாசப்பட்டு நிமிர்ந்தான். வெள்ளைக்காரன் முகத்தில் முறுவல் படர வெவ்வேறு கோணங்களில் நின்று இறுதி மாற்றங்களைப் படங்களாய் எடுத்துத் தள்ளிக்கொண்டிருந்தான்.

கூட்டத்தில் இருந்து ஒருவன் திடீரெனப் பாய்ந்தான். ஆவேசம் வந்தவன்போல் பார்வையற்ற ஓவியனின் முகுதுகில் பளாரென அறைந்தான். அடுத்து இது இன்னார் கை என்று பிரித்து அறிய முடியாவண்ணம் பலகைகள் பரதேசிப் பயலின் முதுகையும் முகத்தையும் பதம்பார்க்கத் தொடங்கின. அதுவரை ஓவியத்தைப் படமெடுத்துக்கொண்டிருந்த வெள்ளைக்காரனின் கேமரா அடிவாங்கும் ஓவியனின் பக்கமாய்த் திரும்பிற்று. அதைக் கண்ட, குள்ளமாய் இருந்த எவனோ ஒருவன் கேமராவைக் குறிவைத்துப் பாய்ந்தான். ஆறரையடி உயரமிருந்த வெள்ளைக்காரன் கேமராவைத் தலைக்கு மேல் இரு கைகளாலும் தூக்கியபடி கோபுரம்போல் நின்றுகொண்டிருந்தான். குருட்டு ஓவியனை அடிக்க முனைவோரும் தடுக்க முனைவோருமாய் கும்பல் சிதறி ஊரே அமளிதுமளியாகத் தொடங்கிற்று. தண்ணீர்ப் பந்தலின் கம்பமொன்றில் குருட்டோவியன் கட்டிவைக்கப்பட்டான். எவ்வளவு அடி வாங்கியும் அவனிடமிருந்து சிறு முனகல்கூட வெளிவராதது கும்பலுக்கு மேலும் வெறியை ஊட்டிற்று. அடிக்க அடிக்க அடிப்பவர் கைகளும் வலிக்கவே கண்டகண்ட வார்த்தைகளில் வசைபாடத் தொடங்கிவிட்டிருந்தனர் சிலர். கொஞ்ச நேரத்தில், குருட்டுக் கோபம் மடைமாறிற்று, அவன்

மீது விழுந்துகொண்டு இருந்த அடி மட்டுப்பட்டு, கண்ணில் பட்டதெல்லாம் நொறுங்கத் தொடங்கின. பஞ்சாயத்துகளில் தீராது பாக்கியிருந்த சிலபல பழைய தகராறுகள் பைசலாயின. வெள்ளைக்காரனும் வெள்ளைக்காரியும் யார்யார் காலிலோ விழுந்து கெஞ்சிக் கூத்தாடி, கேமராவையும் தங்களையும் காப்பாற்றிக் கொண்டனர். ஆவேசத்தில் இருந்த கூட்டத்திடம் ஓவியனுக்காக அவன் பார்வையின்மையைத் திரும்பத்திரும்ப சைகைமொழியில் கூறி மன்றாடினர்.

சூரியன் மறையத் தொடங்கி மின்சார விளக்குகள் ஒளிரத் தொடங்கிக்கொண்டிருந்தன. கரியால் வரைந்த ஓவியம் முற்றிலுமாய்க் கலைந்து, கலவரத்தில் குறுக்குமறுக்காய் ஓடிய ஊரார் கால்களில் வெறும் கரியாய் அப்பிக்கொண்டிருந்தது. வெள்ளைக்காரர்கள் இருவரும் அதீத வினயத்துடன் முதுகை வளைத்து அங்கிருந்த எவரையும் விடத் தம்மைக் குறுக்கிக்கொண்டு எல்லோரிடமும் கைகூப்பியதில் கூட்டம் கொஞ்சம் இளகிற்று. ஓவியனைக் கொன்றால்தான் ஆயிற்றென்று ஆவேசப்பட்டுக்கொண்டிருந்த உள்ளூர்க் குரல்களின் வெறி மெல்லக் குறையத்தொடங்கி வெற்றுக் கூச்சலாய் மாறிக்கொண்டிருந்தது. விதேசிகள் இருவரும் அவனைத் தூக்கி மோட்டார்பைக் மத்தியில் தமக்கிடையில் உட்காரவைத்துக்கொண்டனர். ஊர் எல்லையைத் தாண்டுவதற்குள் அவர்களுக்கு உயிர்போய் உயிர் வந்துவிட்டிருந்தது.

அடுத்த ஊரைத் தாண்டி நெடுஞ்சாலையில் ஏறும் வரையில் கூட அந்த ஊரின் கொலை வெறிக்கூச்சல் அவர்களின் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. விரைந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளிலிருந்தபடியே ஓவியனின் உடலில் வழிந்துகொண்டிருந்த இரத்த காயங்களுக்குத் தான் அணிந்திருந்த மேலுடையைக் கிழித்து, தொட்டுத்தொட்டு ஈரத்தை உணர்ந்த இடங்களில் கட்டுப் போட்டவண்ணமிருந்தாள் வெள்ளைக்காரி.

பல ஊர்கள் கடந்தபின் சற்றே பெரிய நகரத்தை அடைந்தனர். ஓவியனைப் பொது மருத்துவமனையில் ஒப்படைத்து, அவன் கையில் சில ரூபாய்த் தாள்களையும் திணித்துவிட்டு வெளியேறினார்கள் அந்த வெள்ளைக்காரர்கள். ஓவியனின் பலகீனமான கைகளை விட்டு நழுவிய ரூபாய்கள் காற்றலைக்க எவரெவரிடமோ ஒதுங்கின.

அன்றிரவு அவரவர் வீட்டில் ஊரே தேய்த்துத் தேய்த்து கால்கழுவிக் கொண்டிருந்தது. எவ்வளவு கழுவியும் பாதத்தின் அடிப்புறம் ஒட்டிக்கொண்ட கரி மட்டும் போகிற வழியாய்த் தெரியவில்லை. ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளவில்லை என்றாலும் ஏதோ கெட்டது நடக்கப்போவதன் அறிகுறியே இது என்கிற பயம் ஊர்க்காரர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியே பிடித்து ஆட்டத் தொடங்கிற்று.

இதெல்லாம் நடந்து ஓரிரு மாதங்கள் கடந்தபின் அந்தச் சிற்றூரில் திடீரென்று ஒரு நாள் சூறாவளிக் காற்றும் மழையுமாய்ப் பெரும் புயல் அடித்தது. நிற்காது அடித்த மழையில் ஊரே வெள்ளக்காடாகிற்று. விடாது அடித்த மழையில் ஊறி, ஊரில் பல வீடுகள் இடிந்து விழத் தொடங்கின. மழை விடுகிறபாடாய்த் தெரியவில்லை. இடிந்து விழாது என்று உறுதியாய்ச் சொல்லிக்கொள்ளும்படிக்கு ஊருக்குள் நின்றுகொண்டிருந்த ஒரே கட்டிடம் ஊர்க்கோயிலின் கோபுரம் மட்டுமே என்றாகிவிட்டிருந்தது. என்ன தெய்வ குத்தமோ ஏதோ நினைவு தெரிந்த நாள் முதல் இதுவரை இப்படியொன்று நிகழ்ந்ததில்லையே என பீதிகொண்டு ஊரே கோயிலில் கூடியது. எல்லாம் அந்தக் குருடனை அடித்ததால் வந்த வினை. அவனது சாபம்தான் இது என்று உள்ளூர ஊரே நம்பத் தொடங்கியிருந்தது. தங்கத்தில் கண் செய்து போட்டால் எல்லாம் சரியாகிவிடும் என்று யாரோ ஒரு பெரியவர் கூறினார். அதைக் கேட்டதும் ஆகாகா ஆமாம் ஆமாம் என எல்லோரும் ஆமோதித்தனர். அடுத்த வெள்ளிக்குத் தங்கத்தில் கண் செய்து வைக்கத் தலைக்கு இவ்வளவு கொடுப்பது என்றும் ஏகமனதாய்த் தீர்மானம் நிறைவேறிற்று. மழை சற்றே வெறிக்கத் தொடங்கியிருந்தது. ஊர்க்கூட்டம் திருப்தியுடன் கலைய முற்பட்டது. அப்போது, எவரும் எதிர்ப்பாரா விதமாய் திடீரென்று காதைப் பிளக்கும் சத்தத்துடன் பெரிய இடியொன்று கோயில் கோபுரத்தின் மீது இறங்கிற்று. கூடியிருந்த ஒவ்வொருவர் தலையிலும் இறங்கியத்தைப் போலிருந்தது அந்த இடி உண்டாக்கிய சப்தம். குய்யோமுரையோவெனக் கதறியபடிக் கோயிலை விட்டுத் தலை தெறிக்க வெளியில் ஓடிற்றுக் ஊர்க்கூட்டம்.

நிகழ்வின் முழு விபரீதமும் விடிந்ததும்தான் ஊரார் கண்ணில் பட்டது. கோபுரம் இரண்டாய்ப் பிளந்து நின்றிருந்தது. அவரவர் வீடு போனதைவிடவும் ஊர்க்கோயில் இப்படி மூளியாகிவிட்டதே என்பதுதான் எல்லோர் மனதிலும் துக்கமாய்த் தேங்கி நின்றது. குருடனை அடித்த பாவம்தான் இது. தங்கத்தில் கண் செய்து போட்டால் மட்டும் போய்விடுமா என்று எவரோ ஒருவர் உரக்க முணுமுணுத்தார். ஆமாம் ஆமாம் அவனை அடிக்காமல் அப்படியே விரட்டியிருக்க வேண்டும் என்று எவரோ ஒருவர் சொன்னதை அநேகமாய் அனைவரும் ஆமோதித்தனர்.

நூற்றாண்டுகளைத் தாண்டிய கோயில் என்பதால் சட்டசபையிலேயே கேள்வி எழுப்பப்பட்டது. போகவும் பரிகார நிமித்தம் அந்தக் கோயிலுக்கு வந்துபோகாத அரசியல்வாதிகளே கிடையாது என்பதாலும் மூளியான கோபுரம் அரசுக்கு ஏதேனும் அசம்பாவிதத்தை ஏற்படுத்தி, அது தம் பதவிக்கு உலைவைத்துவிடப்பொகிறதே என்கிற பதைபத்தைப்பில் அறநிலையத்துறை அமைச்சர் முடுக்கிய முடுக்கில், கோபுரத்தின் சேதாரத்தைப் பார்வையிட ஓடோடி வந்தனர் உயர் அதிகாரிகள்.

என்ன இருந்தாலும் பிளவுண்ட கோபுரத்தில் ஏறுவது ஆபத்து, எந்த நேரமும் எது வேண்டுமானாலும் சரியக்கூடும் எனவே வேண்டாம் என்று மூத்த அதிகாரி எவ்வளவு சொல்லியும் கேளாது பார்வையிட வந்திருந்த இளம் அதிகாரி விறுவிறுவென ஏணியிலேறி கோபுரத்தின் அடிவாரப் பிளவை அருகில்போய் எட்டிப் பார்த்தான். சுற்றுமுற்றும் பார்த்தவன் கண்ணில், மூளியாகி நின்ற வீணை பொம்மை பட்டது.

இறங்கி வந்தவன், அக்கம்பக்கமிருந்த வீடுகளில் தீவிர விசாரனையில் ஈடுபட்டான். குறிப்பாகச் சிறுவர்களை அழைத்துத் தனித்தனியாய் விசாரித்ததில், ஒரு பையன் மரப்பெட்டிக்குள்ளிருந்து சிறியதும் பெரியதுமாய் இரண்டு உருண்டைகளைக் கொண்டுவந்து கொடுத்தான்.

ஆரம்பகட்ட சேதார அறிக்கை அன்றைக்கே சமர்ப்பிக்கப் பட்டாக வேண்டும் என்பது மந்திரியின் அவசர ஆணையாக இருந்தது. எனவே அதிகாரிகள் வந்த வேகத்தில் திரும்பியாக வேண்டிய நிர்பந்தத்தில் இருந்தனர். திரும்பிச் செல்கையில் அந்த இளம் அதிகாரிக்கு நாட்டின் தலைநகருக்கு சிறப்பு நியமணம் கிடைத்திருப்பதாய் அலைபேசியில் சேதி வந்தது. அவனுக்கு இதிலெல்லாம் பெரிய நம்பிக்கை இல்லாவிட்டாலும் தாம் சொன்னது பலித்ததா. கை மேல் பலன் கிடைத்ததா. அந்தக் கோயிலின் சக்தி அப்படி என்று சிலாகித்து மயிர்க் கூச்செரிந்தார் இரண்டொரு மாதத்தில் ஓய்வுபெறவிருந்த உயர் அதிகாரி.

புதிய பதவியை ஏற்க, தலை நகரத்துக்குக் கிளம்பும் முன் ஞாபகமாய் அந்தக் கோயில் புணரமைப்புக்குப் பொறுப்பேற்றுள்ள தலைமைப் பொறியாளரிடம் இரண்டு உருண்டைகளையும் கொடுத்தான். அந்த பொம்மை இருக்குமிடத்தின் வரைபடத்தையும் வரைந்து கொடுத்த பின்னரே விமானமேறினான் அந்த இளம் அதிகாரி.

கோபுரப் பிளவு, முடிந்தவரை வெறும் கண்களுக்குத் தெரியாதவண்ணம் பூசிமெழுகப்பட்டது. கீழிருந்து பார்க்கையில் இடி விழுந்ததன் சுவடே தெரியவில்லை என்று புணரமைப்பில் ஈடுபட்டிருந்த ஊழியர்களும் அதிகாரிகளும் ஒருவருக்கொருவர் தங்களுக்குள்ளாகவே சொல்லிப் பாராட்டிக்கொண்டனர். இருந்தும் தலைமைப் பொறியாளருக்குள் ஏதோ குறைவது போன்ற உறுத்தல் இருந்துகொண்டே இருந்தது. அந்த ஊர் விட்டுப் புறப்படும்போதுதான், இளம் அதிகாரி கொடுத்துச் சென்ற உருண்டைகள் அவர் நினைவுக்கு வந்தன. தமது கைப்பையிலிருந்து அவற்றை எடுத்துக் கொடுத்துக் கையோடு பொறுத்தும்படி மேஸ்திரியிடம் கூறினார். இருட்டத் தொடங்கிவிட்டிருந்ததால் விடிந்ததும் முதல் காரியமாய் அதைச் செய்வதாய் தயங்கியபடி உறுதி கூறினார் மேஸ்திரி. வண்டி கிளம்புமுன் முடித்தாகவேண்டும் எனக் கட்டாயப் படுத்தப்படவே சிமிட்டிச் சாந்தினை சித்தாளொருவன் எடுத்துவர, வருடக்கணக்காய்

விளக்கு வைத்தபின் அருந்தும் நாட்டுச் சரக்கின் கைங்கர்யத்தில் பார்வை மங்கிப் போயிருந்த மேஸ்திரி கடனெழவே என இரண்டு உருண்டைகளுடன் ஏணியில் தட்டுத் தடுமாறி ஏறினார். ஏணியின் தலை பாகத்தில் ஒருகாலும் கோபுரத்தில் ஒருகாலுமாய் ஊன்றியபடி வீணை வாசிக்கும் பொம்மையின் ஒருபக்க முலைக்கு பதிலாய் வீணையின் குடத்தையும் குடமிருக்கவேண்டிய இடத்தில் முலையையும் காமாசோமாவென ஒட்டவைத்துவிட்டு இறங்கினார். குடியும் இருட்டும் காரணமாய் அவர் கண்ணுக்கு படாதது போலவே பகலிலும்கூட கீழிருந்து பார்க்கும் எவர் கண்ணுக்கும் எதுவும் வித்தியாசமாய்ப் படவில்லை.

கால ஓட்டத்தில் அந்தச் சிற்றூர் மெல்ல வளர்ந்து பேரூராயிற்று. நாகரிக வளர்ச்சியில் நகர அந்தஸ்தைக்கூட அடைந்துவிட்டிருந்தது. கோபுரத்தின் பிளவில் பூசப்பட்ட சிமெண்ட்டுப் பூச்சு, மழை வெயில் கும்பாபிஷேகம் எனப் பலவற்றையும் பார்த்து நிறமொன்றிவிட்டிருந்தது.

இதெல்லாம் நடந்து பல ஆண்டுகள் கழிந்தபின் ஒரு நாள், பார்வை எனத் தலைப்பிடப்பட்ட, முலையும் வீணையின் குடமும் இடம் மாற்றி வைத்து வரையப்பட்டிருந்த வீணை வாசிக்கும் பெண்ணின் வித்தியாசமான மாபெரும் கோட்டோவியம் ஒன்று மேற்கத்திய நாடொன்றில் ஏராளமான விலைக்கு ஏலத்தில் விற்பனையாகிற்று. பன்னாட்டு நிறுவனமொன்றின் பல அடுக்குமாடிக் கட்டிடத்தின் பிரதான வரவேற்பறையின் சுவரில் அது மாட்டப்பட்டது. அதன் புகைப்படம் உலகின் பல பத்திரிகைகளிலும் வெளியாயிற்று.

பரிகாரத் தலமாகப் பெரும்புகழைப் பெற்றுவிட்டிருந்த அந்தக் கோவில் கோபுரத்தின் எதிரில், புதிதாய்த் தொடங்கப்பட்டிருந்த பன்னாட்டு சங்கிலித் தொடர் காபிக் கடையொன்றில், காலணியைக் கழற்றிவிட்டுக் கால்மேல் கால் போட்டபடி, நாட்டின் வெவ்வேறு பகுதிகளிலிருந்து விருந்தினராய் வந்திருந்த தன் நண்பர்களிடம், ஃபேஸ்புக்கில் பகிரப்பட்டிருந்த அந்தக் கோட்டோவியத்தைத் தன் ஐபேடில் காட்டியபடி, நம் நாட்டின் கலாச்சாரப் பாரம்பரியம் உலகெங்கும் பரவியிருப்பதைப் பெருமிதத்துடன் விதந்தோதிக்கொண்டிருந்த, வெளிநாட்டில் படித்து முடித்து வேலையில் சேர்வதற்கு முன்பான விடுப்பில் வந்திருந்த உள்ளூர் இளைஞனுடைய பாதத்தின் அடிப்புறம் கரி பூசியதைப்போல் கறுப்பாய் இருந்தது.

(மார்ச் 2015)
காலச்சுவடு (ஏப்ரல் 2015)

# கோடு

## - விமலாதித்த மாமல்லன்

காலையிலிருந்து, துளியூண்டு கழிப்பறையில் மேற்கத்திய கழிப்பானைப் பொருத்தும் வேலையில் மும்முரமாய் இருந்தார் இப்ராஹிம்.

வேலையுடன், பாலவாக்கத்தில் இருந்து பெஸண்ட் நகருக்கு, அறுபதைத் தாண்டிய வயதில், சைக்கிள் மிதித்து வந்த களைப்பும் சேர்ந்துகொண்டது. பையன் பேச்சைக் கேட்டு கொஞ்சம் முன்னரே கிளம்பியிருந்தால், பஸ்ஸிலேயே வந்திருக்கலாம். மகன் நேரடியாய் உணரா வண்ணம், வண்டி நேரத்தை வேண்டுமென்றே தவற விட்டு, இப்போ நடந்து போனால் பஸ்ஸைப் பிடிக்க முடியாதுப்பா என்று சொல்லி சைக்கிளை எடுத்துக் கொண்டு கிளம்பினார். தம் காரியங்களைத் தாமே செய்வதில் கிடைக்கிற சந்தோஷத்தை அனுபவிப்பதற்காகவே கஷ்டப்படத் தயாராய் இருக்கும் சுதந்திரத்துக்கு முந்தைய தலைமுறை.

பெஸண்ட் நகர் பஸ் ஸ்டாண்ட்டை அடுத்து இருந்தது அந்த மத்திய அரசுக் குடியிருப்பு. பார்க்கப் போனால், இரண்டொரு முக்கியமான தடங்களில் செல்லும் பேருந்துகள் புறப்படும் இடம்தான் அது என்றாலும் வெறும் கடல் மண் பரந்து கிடக்கும் இடத்திற்கு எப்படி டெப்போ என்கிற அந்தஸ்தை அளிக்க முடியும். எதிர்காலத்தில் நிறைய வண்டிகள் நிற்கவும் புறப்படவுமான அளவுக்கு விஸ்தரிக்கக்கூடிய விஸ்தாரமான பரப்பளவுடன் இருந்தது. பிரதான சாலையிலிருந்து பார்த்தாலே தொலைவில் தெரிந்த கடல், வெயிலில் கண்கூச மினுமினுத்தது. பத்து மணிக்கே உச்சி வெயிலாய் சூரியன் தகித்தது. உச்சாணி தண்ணீர் தொட்டிக்குப் பக்கத்தில் கடல் மண்ணில் போடப்பட்டிருந்த மேடையில் தனிக்கட்டையாய் அமர்ந்திருந்தார் பிள்ளையார். நிழலுக்காக சிறிய கூரை அவர் தலைக்கு மேல் போடப்பட்டிருந்தது. அது போல ஒரு கூரையை சைக்கிளுக்கும் போட முடிந்தால் ரொம்ப சவுகரியமாக இருக்கும் எனத் தோன்றியது இப்ராஹிமுக்கு.

பிள்ளையாருக்கும் கடலுக்கும் இடையில் அரை கிலோமீட்டராவது இருக்கக்கூடும். வெட்டவெளிப் பொட்டலில் சாலைகள் மட்டுமே போடப்பட்டிருந்தன. அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான ஆரம்பகட்ட வேலைகள் அங்குமிங்குமாய் நடந்துகொண்டு இருந்தன. மாநில அரசின் இந்த திட்டத்தில் தினந்தோறும் பிளம்பிங் வேலை கிடைத்தால்கூடப் போதும் மகன்களின் கையை எதிர்பார்க்காமல் ஆயுளை ஓட்டிவிடலாம் எனும் அளவுக்கு வீடுகள் வரவிருப்பதற்கான அறிகுறிகள் தெரிந்தன. வீடென்றால் வெறும் நான்கு சுவர்களா கக்கூசும் பைப்பும் குழாய்களும் இல்லாமலா. மிதிவண்டியிலிருந்து இறங்கி, பெருந்து நிறுத்தத்தின் மணலில் தள்ளிக்கொண்டு வந்தார். நீட்டிக்கொண்டிருந்த மட்டப்பலகையும் கொல்லுறுகளுமாக கேரியரில் இருந்த காக்கிப் பை, மணல் நெகிழ்ந்திருந்த இடங்களில் குழந்தை போல கூடுதல் கவனத்தைக் கோரியது. மேஸ்திரி கிறுக்கிக் கொடுத்திருந்த விலாசத்துடன் இரண்டு மாடி ஏறி, அந்த வீட்டுக் கதவைத் தட்டினார்.

ஐயிரு ஆபீசர். பாத்து ரொம்ப மருவாதியா நடந்துக்கனும். உங்குளுக்கு சொல்லத் தேவையில்லை பாய். இருந்தாலும் சொல்லி வைக்கிறேன் என்று சொல்லி இருந்தான் காண்ட்ராக்ட்டு மேஸ்திரி.

இந்த வீடுகள் எல்லாம் கட்டப்பட்டுக்கொண்டு இருக்கும்போதே பிளம்பிங் வேலை பார்த்தவர் இப்ராஹிம். அப்போது இருந்த காண்ட்ராக்டர் வேறு ஆள். இவனை விடவும் கறார் பேர்வழி. இந்த மேஸ்திரி சொன்னதைக்கூட அவர் பெரிதாய் எடுத்துக்கொள்ளவில்லை. அது சரி காண்ட்ராக்ட்டுக்காரர்கள் என்ன நம்மைப் போல அன்றாடங்காய்ச்சிளா. அவர்களுக்கு ஆபீசர்களுடன் ஆயிரம் இருக்கும். அதனால் மேஸ்திரி கொஞ்சம் கூடுதலாய் எச்சரிக்கிறான் என்று சகஜமாய் எடுத்துக்கொண்டார். கதவு திறக்கப்பட்டதும் சாவி கொடுத்த பொம்மை போல நேராகக் கக்கூசைப் பார்க்க நடந்தார் இப்ராஹிம்.

*****

ராமர் போட்ட கோடெல்லாம் நிலைச்சி நின்னுடுத்துங்கறதுதான் ஹிஸ்டரி. சேது பந்தனம் கட்டினப்போ தனக்கு ஒதவி செஞ்சதுக்காக அணிலை வாஞ்சையோட ஸ்ரீ ராமர் தடவிக் கொடுத்தார். அதனாலதான் அணில் முதுகுல கோடு வந்துதுன்னு நம்ம எல்லாருக்கும் தெரியும்.

ஆனா வாழை இலை நடுல ஒரு கோடு இருக்கே அது எப்படி வந்ததுனு உங்கள்ள யாருக்காச்சும் தெரியுமோ.

இராவண சம்ஹாரம் முடிஞ்சுடுத்து. விபீஷண பட்டாபிஷேகமும் முடிஞ்சுடுத்து. லங்கைலேந்து சீதை ஹனுமன் இளையவர் இலட்சுமணனோட எம்பெருமான் ஸ்ரீ ராமர் அயோத்திக்கு திரும்பிண்ட்ருக்கார். வனவாசத்துல இருந்தப்போ பரத்வாஜ ரிஷி ராமபிரானை தன் ஆசிரமத்திற்கு ஏந்தருளும்படிக் கேட்டுண்டார். இப்போ நான் பிக்னிக் வரலை. வனவாசம் முடிச்சு அயோத்திக்கு திரும்பச்சே கண்டிப்பா உங்க ஆஸ்ரமத்துக்கு வரேன்னு வாக்களிச்சார். அதுக்குள்ள என்னென்னமோ நடந்து முடிஞ்சுடுத்து. ஆனாலும் கொடுத்த வாக்கைக் காப்பாத்தலைனா அவர் எப்டி ஸ்ரீ ராமரா இருப்பார். ஆதனால அயோத்திக்கு திரும்பர்ச்சே ஞாபகமா பரத்வாஜரோட ஆஸ்ரமத்துக்கு வந்தார். அவா எல்லாரையும் ஒன்னா சேர்த்து குரூப் போட்டோவாட்டம் பார்த்ததும் பரத்வாஜ ரிஷிக்கு குஷி தாளலை. இருந்து சாப்டாதான் ஆச்சுனு அவா எல்லாருக்கும் போஜனம் ரெடி பண்ணினார்.

வாழை இலைல ஏகப்பட்ட அயிட்டம்ஸைப் பரிமாறினார் பரத்வாஜர். பெரியவாள்லாம் சாப்டட்டும் நாம அடுத்த பந்தில ஒக்காரலாம்னு ஒரு ஓரமா பவ்யமா நின்னுண்ட்ருந்தார் ஆஞ்சநேயர். அனுமனைப் பார்த்து ஓய் இங்க வாரும்னார் ராமர். எதுர வந்து நின்னார் ஸ்ரீ ஆஞ்சநேயர். ஓய்! அப்படியே ஒக்காரும் நாம இன்னைக்கு ஒரே இலைல சாப்டப் போறோம்னார்.

ஒரே எலைல மனுஷா எப்ப சாப்டுவா. எப்ப சாப்புடுவானு கேட்டா என்ன பேச்சு மூசையேக் காணோம். என்ன எல்லாரும் ட்ரீம் சாங்கு சீக்குவென்ஸுக்குப் போய்ட்டேளா. ஒரே எலைல ரெண்டு மனுஷா ஒன்னா

சாப்பட்ற சந்தர்ப்பம் எப்போ… கல்யாணத்துல. ஆமாம். ஆம்படையானும் ஆத்துக்காரியும் ஒரே எலைல ஒன்னா சாப்பட்றது கல்யாணத்துல மட்டும்தான். புருஷன் பொண்டாட்டிக்குள்ள ஏற்றத் தாழ்வு இல்லே. எச்சல் இல்லே. அன்னியோன்யம் உண்டாகணும்னு புரிய வைக்கிறதுக்காகதான் கல்யாணத்தன்னைக்கு அவாளை ஒரே இலைல சாப்ட வெக்கிறது. பெரியவா எதையும் சும்மா சொல்லி வைக்கலே. ஒவ்வொரு சம்ப்ரதாயத்துக்கும் ஒரு அர்த்தமிருக்கு நம்ம இந்து மதத்துல. இதையெல்லாம் விட்டுட்டு சில புத்தி கெட்டதுகள் லவ்வுங்கற பேர்ல இங்கையும் அங்கையுமா தாவி கவுனை மாட்டிக்கிறதுகள். நன்னா மாட்டிண்டுடறதுகள்.

எத்தனை உபகாரம் செஞ்சிருக்கே ஹே ஹனுமா என் உயிருக்கும் மேலான சீதையைக் கண்டுபிடிச்சிக் குடுத்தே சஞ்சீவி ஔஷதம் கொண்டாந்து என் உயிருக்கு உயிரான உடன்பிறப்பைக் காப்பாத்தினே. நீங்க எதையோ நெனச்சு சிரிச்சா பாகவதர் பொறுப்பில்லே. இது ராமாயணம். தீ பரவினாலும் புயல் அடிச்சாலும் மழை பேஞ்சு லோகமே மூழ்கினாலும் ராமாயண பாரதத்துக்கு ஒன்னும் ஆகாது. காலாகாலத்துக்கும் எலச்சு நிக்கும். உண்மையான உடன்பிறப்புனா அது சாக்ஷாத் லக்ஷ்மணன்தான். இராவண சம்ஹாரத்துல இந்த ராமச்சந்திரனுக்கு உதவினே. நீங்கள்ளாம் எதை நெனச்சு சிரிக்கிறேள்னு நேக்குத் தெரியலை. ராமாயணத்துல ராமச்சந்திரன்னா ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி. இதுக்குலாம் மேல, மனுஷாளாட்டம் கட்சி தாவாம என் மேல பரிபூர்ண பக்திய வெச்சுண்டு என் கூடவே இருக்கறவாளை நான் எப்படி ரக்ஷிப்பேன்னு ஒலகத்துக்குக் காட்டவும் - மந்திரி பதவி குடுத்து இல்லே - மனசுல வெச்சுண்டு எப்படிக் காப்பாத்துவேன்னு உலகுக்கு உணர்த்தவும் தனக்குப் போட்டிருந்த அதே இலைல எதிர்ல, விலங்கினத்தை சேர்ந்த ஆஞ்சநேயரை ஒக்கார வெச்சுண்டார் மனுஷனா பிறவியெடுத்த கடவுளான ஸ்ரீ ராமர்.

கொழந்தே உன்னைத்தான். கொரங்கு பாத்திருக்க இல்லையோ. சரி கொரங்குக்கு என்ன பிடிக்கும்.

ம்… ம்… வாதபதம்… ம்…

தேங்கா

தேங்கா

நீங்க செத்த இருங்கோ மாமி கொழந்தயே சொல்லுவன். சொல்லுடா கண்ணா

ம்… சிப்ச்சு.

பேஷ் அப்டிப்போடு.

இப்டி இப்டியா காய்கறிகள் பழம் இத்யாதி இத்யாதிகளையெல்லாம் தமக்குப் போடப்பட்ட வாழை எலைல எதிர்பக்கமா ஆஞ்சநேயருக்கா நகர்த்தி வெச்சு நடுல நீட்டமா ஒரு கோடு கிழிச்சார் ஸ்ரீ ராமர். அதுலேந்துதான் வாழை இலை நடுல கோடோட வெளைய ஆரம்பிச்சுது.

ஸ்ரீராம மூர்த்திக்கு ஜெய மங்களம்
கல்யாண ராமனுக்கு சுப மங்களம்
ஜே ஜே ராம
ராம ராம

*****

சிலோன் போய்வந்தபோது, சீச்சு கொண்டுவந்து கொடுத்திருந்த, மரவட்டை நாய் போல் நீளமாய் இருந்த டேப் ரெக்கார்டரை அணைத்துவிட்டு அடடா பிரமாதம் என்று புல்லரித்தார் ஸ்ரீனிவாச ராகவன். கை பரபரத்தது. போனைப் போட்டார் மருமானுக்கு.

நீ நேர்ல கேட்டையோ. குடுத்து வெச்சவண்டா நீ. பெரிய புண்ணியம். ரொம்ப தேங்ஸ்டா. பகவான் க்ருபைல காலக்ஷேபத்தை டேப் பண்ணனும்னு நோக்குத் தோணித்தே. என்னமா பேசறார். என்னா கொரல் என்ன கொரல் அருவியாட்டம் ஹோனு அமர்க்களமா இருக்குடா. காண்டெம்ரரி விஷயத்தையெல்லாம் கலந்து ஜனரஞ்சகமா ஜமாய்க்கறார். அற்புதம் என்று சிலாகித்துக்கொண்டே போனார் ஸ்ரீனிவாச ராகவன். இடையிடையில் டக்கு முக்கு லொட்டு லொட்டு என கக்கூசில் இப்ராஹிம் ஏற்படுத்திக்கொண்டிருந்த சத்தம் பேச்சின் சுவாரஸித்துக்கு இடையூராய் இருக்கவே நா அப்பறம் பேசறேன்... அது ஒன்னுமில்லை கொஞ்சம் டாய்லெட் வேலை நடந்துண்டுருக்கு அதான் என்று எரிச்சலுடன் போனைத் துண்டித்து கருப்பு ரிசீவரை டொக்கென்று வைத்தார்.

ராகவனுக்கு இன்றைக்கெல்லாம் இருந்தால் ஐம்பதைத் தாண்டாது. நிறம் ஒன்றும் பெரிதாய் சொல்லிக்கொளும்படியானது இல்லை என்றாலும் புஷ்டியின் காரணமாய் மினுமினுத்த தேகத்தில் பெரியமனுஷக்களை அப்பிக்கொண்டு இருந்தது. நாக்கு எடுத்துக்கொண்ட சுதந்திரம் காரணமாய் உட்கார்ந்து அலம்பிக் கொள்வது சிரமமாக ஆரம்பித்திருந்தது. ரெண்டு நிமிஷத்துக்கு மேல் குத்துக்காலிட்டு உட்காரவும் முடியவில்லை. எழவு இன்னும் என்ன இல்லாதவனைப் போல உட்கார்ந்து போயிண்டு என்று ஒரு நாள் தோன்றிவிட்டது. குவார்ட்டர்ஸ் ஆபீசில் ஹெல்த் கிரவுண்ட் என்று எழுதிக் கொடுத்து சொந்த செலவில் வெஸ்டர்ன் வைத்துக்கொள்ள அனுமதி வாங்கிவிட்டார். குடியிருப்பு கட்டி, அப்படியொன்றும் அதிக காலம் ஆகிவிடவில்லை என்றாலும், இதய நோயாளிகள் இருக்கும் வீடுகளுக்கு, அரசாங்க செலவிலேயே இந்திய கழிப்பானை எடுத்துவிட்டு கம்மோடை வைத்துக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். செலவுக்காக பார்க்கப்போய் இருதய நோயை வரவழைத்துக் கொள்ள முடியுமா என்று மேஸ்திரியை அழைத்து வேண்டியதை வாங்கிவரச் சொல்லி பணம் கொடுத்து அனுப்பி வைத்தார்.

வீட்டு உருப்படிகள் எல்லாம் சம்மர் லீவுக்கு வெளியூர் போயிருந்தன. இரண்டாவது சனிக்கிழமை என்பதால் அனாவசியமாய் லீவும் வீணாகாது என்பதால்தான் அன்றைய தினத்தில் இந்தப் பாடாவதி வேலையை வைத்துக் கொள்ள முடிவெடுத்து இருந்தார்.

வேலை செய்ய ஆள் வருவதற்கு முன்பாகவே இருக்கிற இரண்டு ரூம்களையும் பூட்டிவிடும்படி பண்ணிப் பண்ணி சொல்லிவிட்டுப் போயிருந்தாள் அகமுடையாள். தன்னை மீறி எதுவும் நடந்துவிடாது என்கிற அளவுக்கு தன்னம்பிக்கை கொண்ட தைரியசாலிதான் என்றாலும் தப்பித்தவறி எதாவது காணாது போய்விட்டால் தன் தலையில்தான் பழி விழும் என்கிற ஜாக்கிரதை உணர்வில், கதவைத் திறக்கும் முன்பாகவே இரண்டையும் பூட்டி சாவியை வேட்டி உருட்டுக்குள் செருகி இருந்தார்.

டைனிங் டேபிளிலேயே நெடுநேரம் உட்கார்ந்திருந்ததில் கால் மரத்துவிட்டு இருந்தது. இந்தத் துலுக்கன் எப்படித்தான் இவ்வளவு நேரமாய் குத்துக்காலிட்டு உட்கார்ந்து வேலை பார்க்கிறான் என்று ஆச்சரியமாக இருந்தது. ஒற்றைநாடி உடம்பு. தின்பதெல்லாம் தாடிக்கே போய்விடும் என்பதுபோல மீசை மழித்த நீள வெள்ளை தாடி.

அவர் இடத்திலிருந்து டாய்லெட்டின் ஒரு பகுதிதான் தெரிந்தது. அப்படித் தெரிந்த சட்டகத்துக்குள், அவனுடைய குத்துக்காலிட்ட பின்பக்கம் மட்டுமே முன்னும் பின்னுமாய் நகர்ந்து தெரிந்துகொண்டு இருந்தது. ஸீர்ய்க்கு ஸீர்ய்க்கு என்று சிமெண்டு தரையை சீவி சீவி மெழுகிக்கொண்டு இருந்தான். உள் வேலை முடிந்துவிட்டிருக்க வேண்டும். குத்துக்காலிட்ட வாக்கிலேயே பாதி எழுந்தவண்ணம் வெளியே வந்து வாயிற்படிக்கு இந்தப்பக்கம் அமர்ந்தபடி சீர்ய்க்கு சீர்ய்க்கு.

பின்புறத்தைப் பிடித்துக் கொண்டபடி மெல்ல நிமிர்ந்தான். வாசலில் பார்த்தபோது இருந்ததைவிட இன்னும் வயதானவன் போலத் தோன்றினான். எப்படிப் பார்த்தாலும் அறுபதுக்குக் குறையாது. இடை வழியில் சிமெண்ட்டையும் மணலையும் குமித்துக் கரைத்ததன் மிச்சம் மீதி ஈஷிக்கொண்டு இருந்தது. பக்கத்திலேயே கொட்டப் பட்டிருந்த பழைய சில்லுகள் வேறு. இவற்றையெல்லாம் இவனே எடுத்து இடத்தை சுத்தப்படுத்திவிட்டுப்போனால் நல்லது என எண்ணிக் கொண்டு இருக்கும்போதே, வாஷ் பேசின் அடியில் இருந்த குப்பை பக்கெட்டில் எல்லாவற்றையும் கையாலேயே அள்ளிப் போட்டுக்கொண்டான். நல்ல பாரமாய் இருக்க வேண்டும். பக்கெட்டைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு கீழே இறங்கிப் போனான்.

திரும்பி வந்தவன் துடைப்பம் கேட்டான். அலம்பிவிடாத குறையாய் இடைவழியை சுத்தமாக்கி அதை வாஷ் பேசின் அடியில் சாய்த்து வைத்தான். பாவம், அவனுக்குக் கூட எதாவது போட்டுக் கொடுக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டார்.

கழிப்பறைக்கும் குளியலறைக்கும் இடையில் இருந்த வாஷ் பேசினில் கையைத் தேய்த்து தேய்த்து விரல் விரலாய் அலம்பிக்கொண்டான். கொல்லுறு மட்டப்பலகை இத்யாதிகளுடன் பாத்ரூமுக்குள் போனான். டேங்கை காலி பண்ணிவிடுவானோ என நினைக்கும் அளவுக்கு எல்லாவற்றையும் நிதானமாய்க் கழுவிக்கொண்டான். சரியாக அலம்பிக்கொள்ளவில்லை என்றால் சனி உட்கார்ந்துவிடும் என்கிற பயத்தில், கர்ம சிரத்தையாய் காலைத் திருப்பிக் குதிகாலுக்குத் தனி முக்கியத்துவம்

கொடுக்கும் சிரேஷ்ட ஸ்மார்த்தன் கெட்டான் எனும் அளவுக்குத் தேய்த்து அலம்பிக் கொண்டான்.

வெளியில் வந்தவன், பாத்ரூமுக்கு முன்னால் கீழே போடப்பட்டிருந்த பழைய துணியில் ஈரம் போக பாதங்களைத் துடைத்துக் கொண்டான். தன் சாமான்களைக் காக்கிப் பையில் வைத்துக்கொண்டபடி, சாமி குடிக்கக் கொஞ்சம் தண்ணி குடுங்க என்றான்.

ராகவன் எழுந்து பாத்ரூமுக்குள் போனார். எவர் சில்வர் செம்பில் நீரைப் பிடித்து அவனிடம் நீட்டினார்.

சார் ஒன்னு கேட்டா கோச்சிக்க மாட்டீங்களே.

என்ன.

இல்ல நீங்க இதுலதான் குடிப்பீங்களா.

ஏம்ப்பா. இதே மாதிரி பாத்திரம்தான்பா உள்ள இருக்கறதும்.

இல்ல குடிக்கத் தண்ணி கேட்டா பாத்ரூம்புலேந்து குடுக்கறீங்களே சாமி.

விஷயம் தெரியாத ஆளா இருக்கியே. இதுவரைக்கும் இந்த குவார்ட்டர்ஸுக்குள்ள மெட்ரோ வாட்டர் லாரியே வந்ததில்லை தெரியுமா. இங்க எல்லாமே கிரவுண்ட் வாட்டர்தான். எல்லா எடத்துலையும் வரது ஒரே தண்ணிதான்.

சமைக்கவும் இங்க இருந்துதான் எடுக்கறீங்களா சாமி.

அட என்னப்பா நீ. சமைக்க, சமையக் கட்டுல இருக்குற கொழாயில இருந்து புடிச்சிக்கிறோம். தண்ணி எல்லாம் ஒன்னுதான். எடுத்துக்கோ என்று நீட்டினார்.

பரவாயில்ல சார்.

இப்ப என்ன சமையக் கட்டுலேந்து புடிச்சி குடுக்கணும்கறையா புடிச்சிக் குடுத்தா போச்சு அவ்ளதானே என்று அதே பாத்திரத்துடன் சமையற்கட்டுக்குள் போனார்.

இந்தா

பரவாயில்ல சார் விடுங்க.

என்னப்பா இது. உனக்கு என்னதான் வேணும்.

ஒன்னுமில்லை விடுங்க.

வேண்டாம்ப்பா. தவிச்ச வாய்க்கு தண்ணி குடுக்காத பாவம் என்னை சுத்தும். இந்தா குடிச்சுக்கோ. நாங்க குடிக்கிற தண்ணிதான்.

ஆனா தேக்சா இது இல்லியே சார்.

இதப் பாருப்பா நீ வயசுல பெரியவன். இப்பிடிலாம் சின்னப் பையனாட்டம் அடம் பிடிக்கக்கூடாது. பாத்தரத்துல என்ன இருக்கு.

இல்லை சார் விடுங்க. தாகமாயில்லை.

இன்னும் வேலை ஏதும் பாக்கி இல்லியே.

நீங்களே வந்து பாத்துக்குங்க சார் என்றபடி வாஷ் பேசின் அருகிலிருந்து ஹாலுக்காய் நகர்ந்தான்.

எட்டிப் பார்த்தார். கச்சிதமாய் இருந்தது.

சிமிட்டி பால் நல்லா காயணும். காஞ்சாதான் கெட்டியா பிடிச்சிக்கும். நாளைக்கு வரைக்கும் யூஸ் பண்ணாதீங்க. ஈரம் காஞ்ச பிறகு தரைல லைட்டா தண்ணி தெளிங்க. அதுவும் காஞ்ச பெறகு நல்லா தண்ணி ஊத்துங்க. நாளன்னைக்கி கிளீனா செட்டாயிரும்.

பேசிய கூலியுடன் சேர்த்து இன்னும் ஐந்து ரூபாயை இனாமாக நீட்டினார்.

எண்ணிப்பார்த்து விட்டு தாஸ்தியா இருக்குது சார் என்று ஐந்து ரூபாயை டைனிங் டேபிள் மீது வைத்தான். தமிழ் பேசும் துலுக்கனுக்கு எங்கிருந்து வந்தது இந்த வெளுப்பு.

ஜாஸ்தி இல்லே. தெரிஞ்சிதான் குடுத்தேன் வெச்சுக்கோ.

வேணாம் சார்.

இப்ப உனக்கு என்ன வேணும் நாங்க குடிக்கிற அதே டம்ளர்ல தண்ணி குடுக்கணும் அவ்ளதான. நாங்கள்ளாம் எச்சை பண்ணிக் குடிக்க மாட்டோம். நீ எச்ச பண்ணிடுவியோன்னுதான் குடுக்கலை போதுமா. உன்னை ஒன்னும் மட்டமால்லாம் நினைக்கலை. கொஞ்சம் இரு டம்ளர்லயே குடிச்சுட்டுப் போ. என்ன குடியா முழுகிடப்போறது.

எங்க வீட்லையே கடிச்சி குடிக்கிற பளக்கமில்ல சார். பச்ச கொளந்தைலேந்தே தூக்கிக் குடின்னுதான் சொல்லி வளப்போம்.

என்னைய்யா இது ஆச்சரியமா இருக்கு. நீங்கள்ளாம் எச்சை பாக்காம ஒரே தட்ல சாப்படறவங்க இல்லையா.

ஆமா சார் ஒரே தட்லதான் சாப்புடுவோம். மனுசங்களுக்குள்ள ஒஸ்தி மட்டம் பாக்காம சமமா நடத்தறதுக்காக வந்த பளக்கம் சார் அது. கும்பலா துன்ன ஒக்காந்துருக்கும்போது, அதுல ஒருத்தன் எச்சி பாத்து, சோத்துல ஒரு

பங்கைத் தனக்கானதுனு தனியா ஒதுக்கி வெச்சாலே, அது மத்தவங்களை இளிவு படுத்தறதா அர்த்தம் எங்குளுதுல.

என்ன இருந்தாலும் ஒரே தட்டுல எல்லாரும் எச்ச பண்ணி எப்டி சாப்பட்றது.

எச்சினா என்ன சார். எல்லாரும் கையைக் களுவிட்டுதான சாப்புட ஒக்காரறோம். எடுத்துத் திங்கறதுல ஏது சார் எச்சி. தட்டுல இருந்து எடுத்துத் துன்னாம, துப்பவா செய்யிறோம்.

நீ என்னதான் சமாதானம் சொன்னாலும். கேக்கவே என்னவோ மாதிரி இருக்கு.

பளக்கம் சார் எல்லாம் பளக்கவளக்கம். அவ்ளோ ஒதவி செஞ்ச அனுமாரை என்னதான் ஒன்னா ஒக்கார வெச்சி தன் எலையிலையே துன்ன வெச்சாலும் எலைக்கு நடுவுல ஒரு கோட்டைப் போட்டு ஆயிரம் இருந்தாலும் நீ கொரங்கு கொரங்குதான்டானு சொல்லாம சொல்லீட்டாருல்ல ராமரு.

வாசல் கதவைத் தாள் கூட போடாமல் அப்படியே பிரமை பிடித்தவர் போல உட்கார்ந்திருந்தார் ஸ்ரீனிவாச ராகவன். இப்ராஹிமுக்காக சமையல் கட்டிலிருந்து கொண்டு வந்த டம்ளர், நீருடன் டைனிங் டேபிளின் மீது அப்படியே இருந்தது. அருகில் இப்ராஹிம் திருப்பிக் கொடுத்த ஐந்து ரூபாய் நோட்டு படபடத்துக்கொண்டு இருந்தது.

(நவம்பர் 2015)
தி இந்து பொங்கல் மலர்

# குருவி சாமியார்

## - விமலாதித்த மாமல்லன்

பெண் பித்தன் குருவி சாமியார் ஆன கதை பெரிய கதை. அதைச் சொல்லும் முன் அவர் எப்படி சாமியார் ஆனார் என்பதைச் சொல்லியாக வேண்டும். அதைவிட முக்கியம், சக்தி வாய்ந்த சித்த புருஷர் என தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டாடியவர்களுக்கே எப்படி அவர் இன்னுமொரு போலிச் சாமியார் என்று ஆனார் என்பதைச் சொல்லியாக வேண்டியது. ஆனால் இவையனைத்தையும் விட முக்கியமானது அவர் முக்தியடைந்த சம்பவம்.

அவர் ஒன்றும் பிறவி சாமியாரில்லை. நம்மைப் போலவே இளம்பிராயத்தில் அவரும் அடிக்காத லூட்டியில்லை. உருப்பிடுவாயா நீ நாசமாப் போவே என அவரை ஆசீர்வதிக்காத பெண்களே இல்லை என்கிற அளவுக்கு பெயர் பெற்றவர். ரிஷிமூலத்தில் அவர் இந்துவாக இருந்திருந்தால் கூட எந்த கோபிகையும் அவரை கிருஷ்ணனாக எண்ணிப் புளகாங்கிதப் பட்டிருக்க மாட்டாள். அவரோ முஸ்லீமாக வேறு பிறந்து தொலைத்திருந்தார். ஆனாலும் அவர் மத பேதம் பார்த்ததில்லை குறிப்பாகப் பெண்களிடம். தன் வீட்டுப் பெண்களிடம் வயது வித்தியாசம் பாராமல் சீண்டி விளையாடுபவனை எந்த மதத்துக்காரன்தான் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பான். ஆகவே ஊருக்குள் அவருக்கு எல்லோரிடமும் அப்படியொரு கெட்ட பெயர்.

பொறுக்கி என்று கூப்பிடாத பெண்களே கிடையாது என்றாலும் அவரோ அதை செல்ல வசவு பிரியமான திட்டு என்றே எடுத்துக் கொண்டார். இத்தனைக்கும், தம் பால்ய பருவத்திலிருந்தே அவர் எந்தப் பெண்ணிடமும் கையைக் காலை நீட்டியதில்லை. ஆனால் வாடி போடி என கண்ணடித்தும் ஜாடைமாடையாய் இரட்டைப் பொருளில் பேசியும் எவளையாவது வம்புக்கு இழுக்காமல் ஒரு நாளும் கழிந்ததில்லை.

பாலியல் துன்புறுத்தல் கடுமையான தண்டனைக்குள்ளாகும் சட்டமாக அமல்படுத்தப்படுவதற்கு முன்பாகவே திடீரென்று ஒரு நாள் அவர் அமைதியாகிவிட்டார். அமைதி என்றால் மயான அமைதி. இருக்குமிடம் தெரியாத அளவுக்கு, பேச்சு மூச்சே இல்லை. எப்படி இப்படியொரு மாற்றம் அவரிடம் நிகழ்ந்ததென்று யாருக்கும் புரியவில்லை. வீட்டில் இருக்கிற நேரம் குறைவென்றாலும் அந்தக் கொஞ்ச நேரத்திலும் இந்தப் பையனைப் பற்றியா உலகம் இப்படிச் சொல்கிறது என்கிற அளவுக்குப் பரம சாது. எனவே, வீட்டில் இருந்தவர்களுக்கு முதலில் எந்த மாற்றமும் தெரியவில்லை. ஊரே கரித்துக் கொட்டினலும் ஐந்து வேளை மசூதித் தொழுகைக்கு செல்லத் தவறாத பையன் என்பதால் அவர் நடத்தைக்காக ஏரியாக்காரர்களும் பெரிதாய் அலட்டிக் கொள்ளவில்லை. சொந்த ஏரியாவில் அவர் எந்த

பிரச்சனையும் வைத்துக் கொள்ளாத அளவுக்கு புத்திசாலி என்பதும் இன்னொரு காரணம். இந்தப் பொறுக்கிக்கு என்ன ஆயிற்றென்று பக்கத்து ஏரியா பெண்கள் விநோதமாகப் பார்க்கத் தொடங்கினர். அவர் வம்பிழுக்காமல் போனதில் இளம் பெண்கள், யாரிடமும் சொல்லிக்கொள்ளா விட்டாலும் தனக்கு முக்கியத்துவம் குறைந்து போனதாய் மனதார உணரத் தொடங்கினார்கள்.

அமைதியை அடைந்ததும் அவர் செய்த முதல் காரியம் அசைவம் உண்பதைக் கைவிட்டது. அடுத்த காரியம் மசூதிக்குச் செல்வதைக் கைவிட்டது. கல்லூரிக்குச் செல்வதை நிறுத்திய கொஞ்ச காலத்தில் வீட்டில் உண்பதைத் தவிர்க்கத் தொடங்கி வீட்டுக்கு வருவதையே நிறுத்திக் கொண்டுவிட்டார். ஒரு நாள் திடீரென்று வீட்டைவிட்டு வெளியேறினார். அன்று தற்செயலாக அணிந்திருந்தது கருப்புச் சட்டை. வேறு வழியின்றி அதைக் கழற்றாமல் இருக்கத் தொடங்கவே அதுவே நிரந்தரமாகிவிட்டது. நீல நிற கால்சாராய் நீர் பாரா காரணத்தால் நாள்பட்ட அழுக்கில் கருக்கத் தொடங்கிற்று. குளிக்காமல் கண்டகண்ட இடத்தில் உட்காரத் தொடங்கியதில் பார்வைக்குப் பைத்தியம் போல காட்சியளிக்கத் தொடங்கினார். பதறிப்போன பெற்றோர்கள் ஏர்வாடிக்கு அழைத்துச் சென்றனர். வழியில், சிற்றுண்டிக்காகவும் சிறுநீர் கழிப்பதற்காகவும் வண்டி நிறுத்தப்பட்டது. எல்லோரையும் போல் இறங்கியவர் வண்டியில் திரும்ப ஏறவே இல்லை. தேடிச் சலித்த, பிள்ளைகளும் பெண்களுமாய் ஏழெட்டைக் கொண்ட பெரிய குடும்பம் ஏர்வாடி போகாமலே ஊர் பார்க்கத் திரும்பி அவர் நினைவை மெல்ல ஒழித்தது.

வாலிபத்தின் வசீகரம் புற அழுக்குகள் அனைத்தையும் தாண்டி அவர் முகத்தில் ஜொலித்துக்கொண்டு இருந்தது. அவர் இருந்த ஊர் எதுவென்றோ அது அவரது ஊரிலிருந்து எத்தனை தூரமென்றோ அவருக்கு எதுவும் தெரியாது. தெரிந்துகொள்ளும் அக்கறையும் அவருக்கு இருக்கவில்லை. வந்து சேர்ந்த ஊரில் வாயைத் திறந்து அவர் பேசியதே இல்லை என்றாலும் அவப்போது வந்து பார்த்து உண்ண பழம் பால் என்று எதையேனும் யாரேனும் கொடுத்துக் கொண்டு இருந்தார்கள். கிடைக்கும்போது சாப்பிடுவது கிடைத்த இடத்தில் படுத்துக் கொள்வது என்று அவர் பாட்டுக்கும் காலத்தைக் கடத்திக் கொண்டிருந்தார்.

ஒரு வேளை இருந்த இடத்தில் மறு வேளை இருப்பதில்லை என்கிற உள்ளூர் செய்தி மெல்ல மருவி ஒரு நேரம் தெரிந்த இடத்தில் மறு நேரம் தெரிவதில்லை என்று ஊர் தாண்டிப் பரவத் தொடங்கிற்று. வெளியூரிலிருந்தெல்லாம் ஆட்கள் வரத் தொடங்கினார்கள். வந்து போனவர்கள், ஒரு முறை பார்த்துவிட்டு வந்ததில் தமக்கு நடந்ததாய் நம்பிய திருப்பங்களைச் சொல்லப்போய் அவரைப் பற்றிய அச்சடிக்காத புராணங்கள் ஊர் ஊராய் புழங்கத் தொடங்கின.

அவர் யார் இன்னார் என்பதே தெரியாத காரணத்தால் எல்லா தரப்பிலிருந்தும் ஏகப்பட்டபேர் குவியத் தொடங்கினர். எங்கிருக்கிறார் என அவரைத் தேடி அலையவேண்டி இருப்பது ஒன்றே, பார்க்க வரும் பக்தர்களுக்கு அவரிடம் தீராத குறையாய் இருந்துகொண்டு இருந்தது. கூட இருந்தவர்கள், ஒரு கொட்டகை போட்டு, அவரை எப்படியாவது ஒரு இடத்தில் நிரந்தரமாக உட்கார வைத்துவிட வேண்டும் என அவர் அருகில் ஒரு உண்டியலை வைத்தனர். எவ்வளவு பேர் எவ்வளவு பணம் போட்டாலும் மர்மமான முறையில் உண்டியல் காலியாகவே இருந்தது. அதைப் போலவே அந்த ஊரில் இருந்தவர் வந்தவர் போனவர் என்று தினந்தோறும் யாராவது ஒருவருக்கு எங்காவது ஒரு இடத்தில் புதையல் போல பணம் கிடைத்துக் கொண்டே இருந்தது. ஒருவருக்குக் கூட இந்த இரண்டையும் இணைத்துப் பார்க்கத் தோன்றவில்லை. இரண்டும் அவரது மகிமை என்று எல்லோரும் வாய்க்கு வாய் சொல்லி புளகாங்கிதப் பட்டுக்கொண்டனர். அவரைப் பார்க்கப் போனால் புதையல் கிடைக்கும் என்பதற்காகவே பெருங் கூட்டம் அலைமோதத் தலைப்பட்டது.

வெளியூர் பக்தர்களின் கூட்டம் நெரியத் தொடங்கியதில், கொஞ்சம்கொஞ்சமாக கடைகண்ணிகள் பெருகி பெரிய வர்த்தக ஸ்தலமாகி வசதியாகி வீடுகள் உயரத் தொடங்கின. அந்த ஒரு காரணத்துக்காகவே ஊரின் சொத்தாக உள்ளூர்க்காரர்களால் உள்ளூர அவர் போற்றப்பட்டார்.

தரிசிக்க வந்து செல்வோர் கும்பிட்டாலும் காலில் விழுந்தாலும் திருப்பிக் கும்பிடவோ ஆசி வழங்கவோ செய்யாமல் தம் பாட்டுக்கும் அவர் எங்கோ பராக்கு பார்த்தபடி இருந்தார். அதற்கெல்லாம் வாய்க்குவந்தபடி அவரவர்களே ஆன்மீகமாய் விளக்கமளித்துக் கொள்வதில் தேர்ச்சி பெறத் தொடங்கிவிட்டிருந்தனர் பக்தர்கள். பக்தகோடிகளின் கும்பல் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு செல்லத் தொடங்கி காற்றோட்டமின்றி இரண்டு மூன்று முறை அவர் மயங்கி விழ நேர்ந்தது. அவ்வப்போது மூச்சுப் பேச்சின்றி அவர் விழுந்து கிடப்பதை, புதையல் கிடைப்பதைப் போன்ற அவரது அட்டமா சித்து வேலைகளில் அதுவும் ஒன்று என மெய் சிலிர்த்தது கூட்டம்.

ஒரு நாள், எதிரில் அமர்ந்திருந்த நடுத்தர வயது பெண்மணியின் தலையில் திடீரென கை வைத்துக் இமைமூடினார். அந்தப் பெண்ணின் கணவரும் பிள்ளைகளும் பக்திப் பிரவாகத்தில் கண்மூடி பிரார்த்தித்தனர். யாருக்கும் கிடைக்காத பாக்கியம் என சுற்றியிருந்த அனைவரும் மயிர்க்கூச்சம் அடைந்தனர். கொஞ்ச நேரத்துக்குப் பின்னர் தலையில் அகல வைத்திருந்த கையைக் கண்களைத் திறக்காதபடியே, முன் தலை நெற்றி வழியே மூக்கு மோவாய் கழுத்து மார்பு என்று வயிறு வரை மெல்ல இறக்கித் தடவி விட்டார். பெருத்த மார்பகம் கொண்டிருந்த அந்தப் பெண்மணியோ மெல்ல நெளிந்தாள் கணவனைக் கண்ணோரம் பார்த்தபடி. கணவனோ பரவசத்தில்

இருப்பதைப் போல் கண்டுகொள்ளாமல் இருந்தான். அன்றுமுதல் ஆண் பெண் வித்தியாசமின்றி அனைவரையும் அடிவயிறுவரை தடவி ஆசீர்வதிக்க ஆரம்பித்தார்.

விஷமிகளால் இவை யூடியூப் விடியோக்களாகின. உலகமெல்லாம் பார்த்துப் பொதுவெளியில் துப்பிற்று. வீட்டின் தனியிருட்டில் கணினியில் மற்றவர் வீட்டுப் பெண்களைப் பார்த்து ரசிப்பவர்களின் பிரத்தியேகக் கேளிக்கையாயின இந்த வீடியோக்கள். விதவிதமான பெண்களின் கழுத்துக்குக் கை வந்ததும் நிறுத்தி நிறுத்தி பார்க்கத் தொடங்கினர். பக்தர்களும் பகுத்தறிவாளர்களும் இணையம் டிவி என்று கிடைத்த இடங்களிலெல்லாம், அவர் செய்கை சரியா தப்பா என்று கத்திக் கத்தி ரத்தம் கக்கும் அளவுக்கு விவாதிக்கத் தொடங்கினர்.

இந்தக் கண்கொள்ளாக் காட்சியைக் காண்பதற்காகவே பெருங்கூட்டம் முடியடித்தது. அவரோ எப்போதும் போல இடம் விட்டு இடம் மாறிக்கொண்டே இருந்தார் என்றாலும் செல்போன்களும் வீடியோ கேமராக்களும் அவரை விடாது துரத்தின. ஏதோ ஒரு விசேஷ தினத்தன்று இதை அரசியல் செல்வாக்குள்ள தொலைக்காட்சியொன்று நேரலையாகக் காட்டுவதாய் அறிவித்தது. டிவியில் நன்றாகத் தெரிவதற்காக பவுடரை அப்பிக்கொண்டு முதலாவதாக வந்து உட்காரக் காத்திருந்தாள் கட்டுமஸ்தான இளம் பெண்ணொருத்தி. தலையிலிருந்து கையால் ஆசீர்வதித்துக் கொண்டே வந்தார். அதுவரை பட்டும்படாமல் தடவி ஆசீர்வதித்துக் கொண்டிருந்தவர், டிவி வழியாக உலகமே பார்த்துக்கொண்டிருக்கும் அன்றைய தினம் பார்த்து, மார்புக்கு வந்ததும் கையை எடுக்காமல் அங்கேயே வைத்து அழுத்திக்கொண்டு இருந்தார். கேமாரா அதை ஜூம் செய்தது. அந்தப் பெண் கலவரப்பட்டு அழத் தொடங்கினாள். தற்காலிகமாய் பொருத்தப்பட்டிருந்த பிருமாண்டமான திரைகளில் பல்லாயிரம் பேர் பார்க்க அந்தக் காட்சி தெரிந்தது. கூட்டம் இரண்டுபட்டுக் கொந்தளித்தது. கலவரம் மூண்டது. எல்லோரும் எல்லோரையும் தாக்கிக்கொண்டனர். ஒரு கும்பல் அவர் மீது விழுந்த அடிகளைத் தம் முதுகில் தாங்கி ரணமாக்கிக் கொண்டது. பாதுகாப்பிற்காக நின்ற போலீஸ் தடியடி செய்தே கலவரத்தை அடக்கவேண்டியதாயிற்று. ஊரடங்கு உத்தரவு போடப்பட்டது.

போலி சாமியாரை பாலியல் வன்கொடுமையின் கீழ் கைது செய், குண்டர் தடுப்பு சட்டத்தில் உள்ளே வை, என நாடு தழுவிய போராட்டங்கள் வெடித்தன. அரசு அவருக்குப் பாதுகாப்பாக, துப்பாக்கி ஏந்திய ஆயுதம் தரித்த நான்கு தனிப்படைக் காவலர்களைப் போட்டது. மனம்போன போக்கில் அவர் திரியும் காட்டு மேட்டுக்கெல்லாம் துப்பாக்கியும் கையுமாக அவர் பின்னாலேயே அலைய நேர்ந்தமைக்காக அவர்கள் தம் விதியை நொந்து கொண்டனர். நால்வரில் ஒருவனுக்கு இப்படியோர் அபூர்வ புனிதப்

பயணம் மேற்கொள்ள நேர்ந்ததில் அபார திருப்தி, எப்படியும் தனக்கொரு சந்ததி கிடைத்துவிடும் என்று.

அவர் வாழ்க்கை அகழ்வாராய்ச்சிக்கு உள்ளாகிற்று. அவருடைய சொந்த ஊரின் இடதுசாரி பகுத்தறிவு அறிவுஜீவி ஒருவர், பால்ய பருவத்திலிருந்தே அவர் எப்பேர்ப்பட்ட பொம்பளைப் பொறுக்கி என்பதைக் கண்டுபிடித்து ஃபேஸ்புக்கில் ஸ்டேட்டஸாகப் போட்டார். அது ஏகப்பட்ட லைக்குகளுடன் எண்ணிறைந்த முறை ஷேர் செய்யப்பட்டது. அதன் ட்விட்டர் சுட்டி எக்கச்சக்கமாய் ரிட்விட் செய்யப்பட்டது. #பொம்பளைப்_பொறுக்கி_போலி_சாமியார் என்கிற இணைப்பு டிரெண்டிங்கில் வந்து இரண்டாவது உச்சத்தைத் தொட்டது. தமிழுக்கு இது ஓர் உலக சாதனை என்றனர் ட்விட்டர் ஆட்டிகள்.

கலவரம் ஓய்ந்த இரண்டாவது நாளே கமுக்கமாய் அவருக்கான பாதுகாப்பை விலக்கிக் கொண்டது அரசு. இந்தப் பரபரப்பு மெல்ல ஓயத் தொடங்கிய சமயத்தில் ஒரு நாள் திடீரென அவரைக் காணவில்லை. முற்போக்கு ஊடகங்கள் அவர் தலைமறைவாகித் தப்பி ஓடிவிட்டார் என்றன. அவரது எக்கச் சக்க சொத்துக்கள் எங்கே யாரிடம் உள்ளன என்று கேள்விக் கணைகளைத் தொடுத்தன. ஆன்மீக ஊடகங்கள், அவரது செய்கை ஆட்சேபத்துக்கு உரியதாய் இருந்தாலும் அவரது சக்தி அளப்பரியது என்பதில் சந்தேகமில்லை, இது அவரது இன்னொரு சித்து விளையாட்டு என்று புதையல் கிடைத்த சிலரின் நேர் காணல்களை ஒளிபரப்பின. 24 X 7 இணையத்துக்கும் ஊடகங்களுக்கும் அடுத்தடுத்துப் பேச பல்வேறு திசைகளில் இருந்தும் எதாவதொன்று வந்துகொண்டே இருந்ததில் கொஞ்ச நாளில் ஒரு வழியாய் எல்லோரும் பேசி வைத்துத் தீர்மானம் போட்டது போல அவரை மறந்தே போயினர்.

பற்பல ஆண்டுகள் உருண்டோடின. டிவிக்களில் ஆவேசமாய் பிறாண்டிக்கொண்ட தலைமுறை முடியுதிர்ந்து பல் போய் சதை தொங்கி வயோதிகமேறி தடியூன்றித் தள்ளாடத் தொடங்கிற்று.

எழுதுகோலும் தாளுமாய் யாருமற்ற கடற்கரையில் காவிக் கோவணத்துடன் அமர்ந்திருந்த அவர் கனிந்த பழம்போலக் காட்சியளித்தார்.

நடுங்கும் விரல்களுக்கிடையில் கெட்டியாய்ப் பிடித்திருந்த பேனாவைப் பேப்பரில் வைக்கப் போவதும் எடுப்பதுமாய் இருந்தார். எவ்வளவு நேரமாகியும் பேப்பரைப் பேனா தொடவே இல்லை.

எதிரில் ஏதோ அசைவதுபோல் தெரிய வரவே, கன்களை இடுக்கிக் கையை வெளிச்சத்துக்கு மறைப்பாக்கிப் பார்த்தார்.

குருவி.

சற்றுத் தூரத்தில் ஒரு குருவி, கடலுக்குப் போவதும் கரைக்கு வருவதுமாய் இருப்பது தெரிந்தது.

மெல்லிய வியப்புடன் அதன் செய்கையைக் கூர்ந்து பார்த்தார். கடல் அலையில் போய் தொபுகடீரென விழுந்தது. பிறகு குடுகுடுவென்று கரையில் இருக்கும் உலர்ந்த மணலில் வந்து விழுந்து புரண்டு உடல் முழுக்க மண்ணாக்கிக் கொண்டது. பின்னர் கடலை நோக்கி ஓடி நீரில் விழுந்து குளித்து உடலை உதறிக்கொண்டது. திரும்ப கரையை நோக்கி குடுகுடுவென ஓடி வந்தது. அவர் ஒருவர் அங்கே அமர்ந்திருக்கிறார் என்கிற பிரக்ஞையேயின்றித் திரும்பத் திரும்ப இதையே செய்துகொண்டிருந்தது

என்ன செய்கிறாய் என்றார் தன்னிச்சையாக.

பல்லாண்டுகாலமாகப் பேசாதிருந்து பேசியதில், அவர் குரல் அவருக்கே அசரீரி போல ஒலித்தது.

குருவியோ தன் பாட்டுக்கும் தன் வேலையில் மும்முரமாய் இருந்தது.

திரும்ப அவர் கேட்டார், என்ன செய்கிறாய் என்று.

யாரைக் கேட்கிறீர் என்னையா.

ஆமாம்.

அவரைக் கண்ணெடுத்தும் பாராது கடலை நோக்கி ஓடியபடியே, பேச நேரமில்லை தலைக்கு மேல் வேலை கிடக்கிறது. நான் செய்துகொண்டிருக்கும் அரும் பணியாம் திருப்பணிக்கு ஒரு ஆயுள் போதாது, என்றது.

அப்படி என்னதான் தலைபோகிற வேலையை செய்துகொண்டிருக்கிறாய் என்று தெரிந்துகொள்ளலாமா என்றார் கோணல் முறுவலுடன்.
அது கிடக்கட்டும். இந்தத் தள்ளாத வயதில் செத்தால் சீந்த நாதியற்ற இங்கே வந்து உட்கார்ந்து நீர் என்ன ஓய் செய்துகொண்டிருக்கிறீர். அதைச் சொல்லும் முதலில் என்று ஓடாடியபடியே மேல் மூச்சு கீழ் மூச்சு வாங்கக் கேட்டது.

நான்... நான்... என்று தடுமாறினார். அவருக்கு சொல்லத் தயக்கமாக இருந்தது.

குருவி சிரித்தது. நம் இருவரைத் தவிர இங்கு வேறு யாரும் இல்லையே சும்மா சொல்ல வேண்டியதுதானே நானோ வெறும் குருவிதானே என்றது.

கடவுள் என்கிற மர்மத்துக்கு விளக்கம் எழுதி வைத்துவிட்டு செல்லத்தான் இங்கே வந்தேன் என்றார் கூச்சத்துடன்.

நல்ல விஷயம்தான். செய்ய வேண்டிய காரியம்தான். ஆனால் அதனால் யாருக்கு என்ன பயன் என்றது குருவி.

அவருக்கு திக்கென்றது.

சரி போகட்டும். எவ்வளவு தூரத்தில் இருக்கிறது உம் வேலை என்றது.

இன்னும் ஆரம்பிக்கவே இல்லை…என்றார் வெட்கத்துடன்.

உமக்கு நான் பரவாயில்லை ஓய். எண்ணி வந்த வேலையை ஆரம்பித்துவிட்டேன். உப்பு கரித்து வீணாய்ப் போன இந்தக் கடலை இங்கிருக்கும் மணலைக் கொட்டி தூர்த்துவிட்டால் உலகம் முழுக்க நிலமாகி மனித குலத்துக்கு எவ்வளவு உபயோகமாய் இருக்கும். உம்மைப் போலவே என் ஜென்மமும் சாபல்யம் அடைந்துவிடும் என்றது குருவி.

கூனிக் குறுகி உட்கார்ந்த நிலையில் அப்படியே சமாதியடைந்தார் அவர். குருவி அவர் தலையில் உட்கார்ந்து கீச் கீச்செனக் கத்தி ஊரைக் கூட்டத் தொடங்கிற்று.

(10 ஏப் 2016)
உயிர்மை (ஜூன் 2016)

# பரிசு

## - விமலாதித்த மாமல்லன்

குப்பை மேட்டுலகூட தானா வளர்ற துளசி, எங்காத்துல மட்டும் வரமாட்டேங்கறது. அப்படி என்ன வரம் வாங்கிண்டு வந்துருக்கமோ தெரியலை.

அரசுக் குடியிருப்பின் பால்கனியில் நின்றபடி அடுத்த வீட்டு மாமியிடம் பேசும் அம்மாவின் சன்னக் குரல் கேட்டுத் துணுக்குற்ற சேஷகிரி என்கிற சேஷகிரி ராவ் பதற்றத்துடன் மனைவி இல்லையா என்று சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டான்.

அவளாய் ஒன்றும் சொல்லிக்கொள்ளாவிட்டாலும் அம்மா அவளை காயப்படுத்திக்கொண்டிருக்கிறாள் என்று அவனுக்கு நன்றாகத் தெரியும். அம்மா நல்லவள்தான். அவளுக்கு அவள் ஆதங்கம். அதுவும் ஒரு விதத்தில் நியாயம்தான். சுற்றுப்பட்டு சொந்தத்தில் முன் பின்னாக ஆனாலும் யாருக்கும் குழந்தை இல்லாமல் இல்லை. அத்தைதான் அதிக காலம் எடுத்துக்கொண்டவள். பதினெட்டு வருடங்களுக்குப் பின் பிறந்தாலும் பிறந்தது இரட்டையாக. விரக்தியில்தான் பேசுகிறாள் அம்மா என்று அவன் புரிந்துகொண்டாலும் அவள் காதில் விழுந்தால் பாவம் எப்படி இருக்கும் அவளுக்கு.

அவள் ஆரம்பத்தில் ஓரிருமுறை, தயங்கித் தயங்கி டாக்டரைப் பார்க்கலாமா என்று அவனிடம் கேட்டுப் பார்த்தாள். அவமானப்படத் தான் தயாரில்லை என்று நிர்தாட்சண்யமாய்க் கூறிவிட்டான் சேஷகிரி. கொஞ்சம் வருத்தப்பட்டாலும் கண்ணைக் கசக்கிக்கொண்டு அமைதியாகிவிட்டாள்.

திருமணமே தாமதம் என்றாலும் அப்படி என்ன திருமணமாகி ரொம்ப காலமாகிவிட்டது என்று சுற்றி இருப்பவர்கள் எல்லோரும் துக்கம் விசாரிக்கிறார்கள் என்றுதான் புரியவில்லை. அவனிடம், ஒரிவர் தவிர யாரும் இதுவரை நேரடியாய்க் கேட்டதில்லை. அவர்கள்கூட ஜாடை மாடையாகத்தான் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அக்கம்பக்கத்து மாமிகள் அவளை என்ன பாடு படுத்தியிருப்பார்கள் என்று அவனால் புரிந்துகொள்ள முடிந்தது. ரொம்ப நல்லவளான அம்மாவே இப்படித்தான் இருக்கிறாள் என்று தெரிய வரும்போது ரொம்ப கஷ்டமாக இருந்தது அவளை நினைத்து. பாவம் அவளுக்காகவாவது போய் பார்த்துவிட்டால் என்ன என்றும் தோன்றியது.

சும்மா மூடியிருந்த கதவை சப்தமெழாதபடி திறந்து தலையை மட்டும் உள்ளே நுழைத்தான். கையை மறைப்பாய் வைத்துப் படுத்திருந்தவள் எழுந்துவிட்டாள். வருத்தம் தெரிவித்தான்.

சேச்சே தூங்கலை. சும்மா படுத்திருந்தேன் என்றாள்.

தயங்கியபடி கூறினான்.

பாய்ந்து அணைத்துக்கொண்டு விக்கிவிக்கி அழத்தொடங்கிவிட்டாள். சமாதானப்படுத்துவதற்குள் போதும்போதும் என்றாகிவிட்டது. எவ்வளவு அடக்கிக் கொண்டு இருந்திருப்பாள். பெருமூச்சு விட்டான். எல்லாம் தன்னால்தான். தன்னுடைய பயத்தினால்தான். என்னென்னவோ பயம்.

அலுவலகத்தில் மகேஸ்வரிகூட ஒரு நாள் செக்ஷன் ஹெட்டிடம் சொல்லிக்கொண்டு இருந்தாள். தாம்பரம் பக்கத்தில் சித்த வைத்தியம் பார்க்கும் பிரபலமான பெண் டாக்டர் பற்றி. பல வருடங்கள் இல்லாமலிருந்த அவளது உறவினருக்கு அவரிடம் சென்ற மூன்றாவது மாதத்தில் அமைந்து விட்டதாம். சைடு எஃபெக்ட் பற்றி அவர் கேட்டார். பாவம் அந்தப் பெண்ணின் கணவருக்கு சொரியோசிஸ் வந்துவிட்டது ஆனாலும் இருப்பதற்குள் சித்தாதான் சேஃப் என்றதும் நினைவுக்கு வந்தது. அவர்கள் இருவரும் உரையாடிக்கொண்டது அவர்களுக்காக இல்லை என்று அவனுக்கு நன்றாகத் தெரியும். இருவருக்குமே தலைக்கு இரண்டு வீதம் இருக்கிறது. இங்கிதம் தெரிந்த மனிதர்கள்.

எப்படியும் ஆங்கில மருத்துவம் என்றால் லட்சத்துக்கு மேல் ஆகும். ஒரு தடவையில் கூடி வருவது அபூர்வம். குறைந்தபட்சம் மூன்று தடவையாவது போயாக வேண்டும். முதலில் ஒன்றுமே இல்லை சாதாரணமாக முயற்சிக்கலாம் என்று ஒரு தடவைக்கு ஐந்தாயிரம் பத்தாயிரம் என்று தொடங்குவார்கள். இதுவே மாசா மாசம் என்று ஒரு வருடத்துக்கோ இரண்டு வருடங்களுக்கோ இழுத்துவிடுவார்கள். அதுவாக செட்டாகவில்லை எனவே அடுத்தடுத்து சோதனை பரிசோதனை என்று குத்திக் குத்திப் பெண் உடலைப் புண் ஆக்கி விடுவார்கள். குழந்தை பிறக்கிறதோ இல்லையோ போடப்படும் ஊசிகளிலேயே அவளது பாதி உடம்பு போய்விடும். டிவியில் மட்டுமல்ல, நேரில்கூட அறைக்குள் முதல் முறை செல்கையில், பேச்செல்லாம் தேனொழுகத்தான் இருக்கும். எல்லாம் செலவழித்து தோல்வியடைந்துவிட்டால், என்ன இப்படி ஆகிவிட்டதே என்று கேட்கக்கூட முடியாது. கேரண்ட்டி வாரண்ட்டியெல்லாம் கொடுக்க, இது என்ன எதாவது எலக்ட்ரானிக் அயிட்டமா. எல்லோருக்கும் செய்வதைப் போல உங்களுக்கும் மனப்பூர்வமாய்தான் செய்தோம். எத்தனையோ பேருக்கு செட்டானது உங்களுக்கு செட்டாகவில்லை. இதற்கு நாங்கள் என்ன செய்ய முடியும் என்று சொல்லிவிட்டாள் அந்த பிரபல டாக்டர். கவலைப் படாமல் மனதில் நம்பிக்கையோடு இன்னொரு முறை முயற்சி செய்யலாம், நிச்சயம் பலன் கிடைக்கும் என்று எதோ குறி சொல்பவள் போல் சாதாரணமாய் சொல்லி அனுப்பிவிட்டாள். சேஷகிரி, எது எப்படியோ ஆனா குழந்தைங்கறது

சர்வ சத்தியமா கடவுளின் பரிசு. இதுல சந்தேகமே இல்லை. கிஃப்ட்டை துட்டு செலவழிச்சி வாங்கப் பாக்கறது எவ்வளவு பெரிய முட்டாள்தனம். அதுவா கிடைக்கணும். இல்லாட்டா இல்லே அவ்வளவுதான்னு இருந்துடனும். டாக்டருங்கள்ளாம் உதவலாம் உருவாக்கமுடியாது. சாமியில்லை பூதமில்லை என்று சொல்லிக்கொண்டு திரியும் ராமனாதன் உணர்ச்சிவயப்பட்டு பீச்சில் சொல்லி அழுதது சேஷகிரியின் மனதின் அடியில் தங்கிவிட்டிருந்தது. அவனுக்கோ அவ்வளவு பணத்துக்கெல்லாம் வழியுமில்லை பூர்வீக சொத்து சுகம் என்கிற வசதியுமில்லை. அரசுக் குடியிருப்பு கிடைத்ததே போன ஜென்மத்தில் செய்த புண்ணியம் என்று எண்ணி திருப்திப் பட்டுக்கொள்ள வேண்டியதுதான்.

தாம்பரம் போல அருகில் எங்காவது சித்த மருத்துவ கிளினிக் இருந்தால் செல்லலாம் என்று சொன்னதுதான் தாமதம், ஒரு நோட்டுப் புத்தகத்தைத் தலையணை அடியில் இருந்து எடுத்தாள். பக்கம் பக்கமாக, டாக்டர் பெயர் முகவரி செல்லும் வழி என்ன செலவு என்று ஏகப்பட்ட விபரங்களை எழுதி வைத்திருந்தாள். வேலைக்குச் செல்லவில்லை என்பதால் தின்று விட்டு தூங்கிக்கொண்டு இருப்பவளில்லை என்று தெரியும். ஆனால் இவ்வளவு சமத்து என்று தெரியாது. இவ்வளவு ஏக்கத்தையும் எப்படி வெளியில் காட்டிக்கொள்ளாமல் இயல்பாக இருந்துகொண்டு இருக்கிறாள் என்று நினைக்க நினைக்க, டாக்டரிடம் போகமாட்டேன் எனும் பிடிவாதத்தால் அவளைத் தானும் கொடுமைப்படுத்தி இருக்கிறோம் என்று அவனுக்குக் குற்ற உணர்வு மேலோங்கிற்று.

நாளைக்கு நல்ல நாளா பாரேன்.

பாய்ந்து போய் மாத்வ பந்து பஞ்சாங்கத்தை எடுத்து வந்தாள்.

இன்னைக்கு சப்தமி நல்ல நாள்தான். நாளை நாளன்னைக்குனா அஷ்டமி நவமி வந்துவிடும்.

அப்ப இன்னைக்கே போயிடலாம்.

சனிக்கிழமை விடுமுறை தினம் என்பதால் மதிய உணவு அன்று பத்தரை பதினொன்றுக்கே முடிந்து, சமையல் மேடையைக்கூட அலம்பிவிட்டாற்று.

அந்த நோட்டுப் புத்தகத்தில், இருந்ததிலேயே அருகிலும் சகாய செலவிலும் இருந்த ஒரு சித்த மருத்துவரைத் தேர்ந்தெடுத்தான். அதற்கு அவள் நான்கு நட்சத்திரக் குறி கொடுத்து இருந்தாள்.

இது என்ன.

இது பாப்புலாரிட்டி கம் சக்ஸஸ் ரேட்.

ஏய் என்ன நீ பெரிய ஸ்காலராட்டம் இதுல பெரிய ரிசர்ச்சே பண்ணிவெச்சிருக்கே.

இன்னோரு நோட்புக் இருக்கு. எந்தெந்த மெடிசின்ல என்னென்ன பத்தியம், டூஸ் அண்ட் டோன்ட்ஸ்னு விவரமா எழுதி வெச்சிருக்கேன் எடுக்கவா.

சான்ஸே இல்லை. சத்தியமா சொல்றேன் உன்னைப் பத்தி எனக்கு ஒன்னுமே தெரியலைனுதான் தோணுது சாரி.

அதெல்லாம் ஒன்னுமில்லே. மத்தவங்க சொல்றதுக்காக இல்லே எனக்கே பிடிச்சதாலதான் செஞ்சிருக்கேன்.

இவ்ளோ பிடிச்ச விஷயத்தை, மாட்டேன்னு நான் சொல்லிட்டேங்கற ஒரே காரணத்தால எப்படி இவ்ளோ நாளும் உள்ளையே உன்னால அடக்கி வெச்சிக்க முடிஞ்சிது.

உங்களையும் பிடிக்குமே அதனால.

சேஷகிரிக்குக் கண் கலங்காத குறை. அவள் கையை மெல்லப் பிடித்தான்.

1:30-3:00 எமகண்டம். அதற்கு முன் அங்கு இருந்தாகவேண்டும் என்று உடனடியாய்க் கிளம்பிவிட்டனர். 8:00-12:00 2:00-6:00 விளக்கு வைத்தபின் அவர் பார்ப்பதில்லை என்பது உடபட அவள் நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைத்திருந்தாள். திருவல்லிக்கேணி ஹைரோடுக்குப் பின்னால் இருந்த சந்தில் இருந்தது அந்த சித்த மருத்துவரின் கிளினிக். மருத்துவரைப் பார்க்கும் முன் குறைந்தபட்சம் கோவிலையாவது பார்த்துவிடலாம் என்று, அதைத் தாண்டி பார்த்தசாரதி கோவில் கோவிலின் பின்புற நரசிம்மர் வாசல் ராகவேந்திரர் மடம் என்று பிரதட்சணமாய் சுற்றிக்கொண்டு சர்ச்சுக்குப் பின்னால் இருந்த மருத்துவ மனைக்கு, செகண்ட் ஹாண்டாய்ப் மழை வரும்போது மக்கர் பண்ணினாலும் பலகாலமாய் உற்ற நண்பனாய் இருந்துவரும் டிவிஎஸ் 50யில், ஒன்று இருபதுக்கே வந்து சேர்ந்துவிட்டனர். இரும்பு கேட்டின் திட்டிக் கதவுக்கு உள்ளே நுழைந்தால் படிக்கட்டு முன்னால் ஏகப்பட்ட செருப்புகள். கூட்டத்தைப் பார்த்து சரியான இடம்தான் என்று உற்சாகமாகவும் எவ்வளவு நேரம் ஆகுமோ என்று ஆயாசமாகவும் இருந்தது. டோக்கன் வாங்கும் முன். மொபைலை எடுத்து மணி பார்த்தான் 1:28 காட்டிற்று.

இன்னும் நாற்பது ஐம்பது பேர்களுக்குப் பின்புதான் தங்கள் முறை என்பதாலும் உட்கார இடமில்லாத காரணத்தாலும் காற்றோட்டத்துக்காகவும் கட்டிடத்துக்கு வெளியில் வந்து நிழலில் ஒதுங்கி நின்றனர். இவர்களைப் போலவே இன்னும் பலரும் மழைத் தடுப்பு போட்ட ஜன்னல், மரத்தடி என்று எங்கெல்லாம் ஒண்ட நிழல் கிடைக்குமோ அங்கெல்லாம் நின்றவண்ணம் அமர்ந்தவண்ணம் இருந்தனர். வெய்யில் தகித்துக்கொண்டு இருந்தது. இந்த ஜாதி அந்த மதம் பணக்காரன் வறியவன் என்கிற வேறுபாடின்றி என்னென்ன வயதில் எத்தனை வகை தம்பதியர். தங்களுக்குமட்டுமின்றி இது இவ்வளவு பேருக்குமான பிரச்சனையா என்று மூச்சு முட்டியது. ஒரே ஒரு வயிறு தூக்கியப் பெண்ணைக்கூடப் பார்க்க முடியவில்லையே எப்படி என்றும் தோன்றிற்று. அவன் மனதைப் படித்தவள் போல் மனைவி சொன்னாள், கருவுற்றதும், இந்த மருத்துவரின் மனைவி அடுத்த தெருவில் வைத்திருக்கும் இன்னொரு மருத்துவ மனைக்குச் செல்லச் சொல்லிவிடுவாராம் அந்த மருத்துவர். அவர்கள் செய்துகொண்டு இருப்பது அசாதாரணமான சமூக சேவை என்று தோன்றியது. அவரே கூட அங்கே மாட்டப்பட்டிருந்த படத்தில் பார்க்கக் கொஞ்சம் சித்தர் போலத்தான் இருந்தார்.

சென்றதும் அவரை சந்தித்ததும் சட்டையணியாத அவரது உடல் அசைவுகளும் ரத்தினச் சுருக்கமாய் அவர் பேசியதும் ஏதோ விபூதிப் பிரசாதம் போன்ற மக்கல் நிறத்திலிருந்த மாவுப்பொடி மருந்துகளை, உள்ளே இருப்பது வெளிப்படையாய் தெரியும் பிளாஸ்டிக் பாக்கெட்டுகளில் கொடுத்ததும் எல்லாம் ஏதோ, பரிபூரண தன்னம்பிக்கை அளிக்கும் நல்ல கனவு போல் இருந்தது. வீடுவந்து சேருகையில் நன்கு இருட்டிவிட்டிருந்தது. மிதப்பது போல உணர்ந்தான்.

வீடு வந்து சேர்ந்த பின்புதான் மனைவி கூறினாள், அவ்வளவு தூரம் போய்விட்டு கோவிலுக்கு உள்ளே சென்று சுவாமியை தரிசிக்காமல் வந்துவிட்டோமே அவர் அருளால் அல்லவா இன்று இங்கு சென்றுவர வாய்த்தது என்று. எப்படி தவறிப்போனது என்று சேஷகிரிக்கும் வியப்பாய்தான் இருந்தது. வண்டி எடுக்கும்போதே, வண்டி வாங்கிய நாளன்று வண்டியை எடுக்கும்போது சொல் என்று அம்மா சொல்லிக் கொடுத்திருந்த ஜெயஸ்ரீ கருடத்வஜவை கர்ம சிரத்தையாய் சொல்லத் தவறாதவன், அவ்வளவு அருகில் போய்விட்டு, நரசிம்மரை எப்படி தரிசிக்காமல் வந்தோம் என்று ஆச்சரியமாய் இருந்தது. நினைப்பதும் மறப்பதும் எல்லாம் அவன் செயல் என்று மனதைத் தேற்றிக்கொண்டான்.

பொதுவாக எங்கே சென்றாலும் அம்மாவிடம் சொல்லாமல் செல்லாதவன். என்றைக்குமே எங்கே போகிறாய் என்று அவளும் கேட்டவளில்லை. இன்னும் சொல்லப்போனால் அப்பா போன நாள்

முதலாய், அவன் வெளியில் கிளம்பும் போது எதோ முக்கியமான வேலை இருப்பதுபோல் சமையல் கட்டுக்குள் போய்விடுவாள். விட்டுக் கதவைத் தாண்டும்போது, 'ஹோய்ட்டு பர்த்தனே' எனும் இவனது உரத்த குரலுக்கு பதிலாய் நோடி 'ஹோய்ட்டுபா' என்று பதில் குரல் கொடுப்பதோடு சரி.

எங்கே போய் வந்தோம் என்பதை அன்று அம்மாவிடம் கூறவில்லை. இத்தனை நாள் அவள் பட்ட வருத்தத்துக்கு நல்ல சேதியாய் சொல்லலாம் என்று கிளம்பும் முன்பே மனைவியிடம் கலந்து தீர்மானித்து இருந்தான்.

அடுத்து வந்த இரண்டு நாட்களையும் அஷ்டமி நவமி என்பதால் எல்லா காரியத்திலும் தவிர்த்தான். அடுத்த நாள் செவ்வாய் ஆயிற்றே அன்று மருந்து சாப்பிட ஆரம்பிப்பதா என்று தயங்கினான். அம்மாவைக் கேட்கலாம் ஆனால் விஷயத்தைச் சொல்லாமல் எப்படிக் கேட்பது.

அதிலும் மனைவிதான் உதவினாள்.

பிராமணாளுக்குக் கிழமை முக்கியமில்லை திதிதான் முக்கியம்னு எங்கள் அம்மா கூறுவாள். கிழமை செவ்வாயாய் இருந்தாலும் திதி தசமி ஆயிற்றே.

குளித்து முடித்து ஈரத் துண்டுடன் சுவாமி கும்பிட்டபின் உடை மாற்றிக்கொள்ள படுக்கை அறைக்குள் வந்தான். மனைவி ஏற்கெனவே ஈரத் தலையில் முடிந்த துண்டுடன் எதிலும் ஈஷிக்கொள்ளாமல் மடிமடியாய் இருந்தாள். பயபக்தியாய்க் கண்களை மூடி ராகவேந்திரரை தியானித்துவிட்டு சித்தர் கொடுத்த மருந்து இருந்த பிளாஸ்டிக் கவரைப் பிரிக்கப் போனான். உள்ளே ஏதோ ஓடுயது போல் இருந்தது. ஜிப் லாக் கவரின் மேற்புறத்தைப் பிடித்து உலுக்கினான் இன்னும் இரண்டு மூன்று ஓடுவது பளிச்செனத் தெரிந்தது. மனைவியைப் பார்த்தான் அவள் முகம் பேயறைந்ததைப் போல் வெளிறி இருந்தது.

அவசர அவசரமாய் தலையைத் துவட்டிக்கொண்டு உடையணிந்து அத்தனைப் பொட்டணங்களையும் எடுத்துப் பேண்ட் பாக்கெட்டில் திணித்துக்கொண்டு வேகமாய்ப் பறந்தான். அவன் வண்டியோ அவன் திருகிய திருகலில் எப்போது வேண்டுமானாலும் உயிரை விட்டுவிடுவேன் இந்த முறுக்கு முறுக்குகிறாயே என்று முக்கி முணகிற்று.

சித்த மருத்துவரின் அறைக்கு வெளியே தடுத்த ஆளைத் தள்ளிக்கொண்டு உள்ளே சென்று பொட்டணத்தை மேசைமீது வைத்தான்.

என்ன என்பது போல ஏறிட்டுப் பார்த்தார் மருத்துவர்.

பாருங்க உள்ள பூச்சி.

நம்ம மருந்துக்கு எவ்ளோ எஃபெக்ட்டுங்கறதைத்தானே இது காட்டுது. அதைப் பூச்சியா பாக்கறீங்க நீங்க. உயிரா பார்க்குறேன் நான். அதான் உங்களுக்கும் எனக்குமான வித்தியாசம். பிளாஸ்டிக் கவருக்கு உள்ளையே உயிர் உற்பத்தி ஆயிடுச்சில்ல.

அறைக்குள் இருந்தவர்கள் பரவசமடைந்தவர்கள் போல உச்சுக் கொட்டினர். விருட்டென வெளியேறினான் சேஷகிரி.

ஊரே புழுதியால் நிறைந்திருப்பது போல் அடிக்கடி கண்ணைக் கசக்கித் துடைத்துக்கொள்ளவேண்டி இருந்தது. என்ன நடந்ததென்று, மனைவி நம்பும்படியாய் இரவு என்ன பொய் சொல்வதென்று யோசித்த வண்ணம் அலுவலகத்தை நோக்கி நிதானமாய் வண்டியை ஓட்டிக்கொண்டு இருந்தான்.

(2015 ஆகஸ்ட்)
கல்கி

# வேண்டுதல்

## - விமலாதித்த மாமல்லன்

கிழவர் படுத்த படுக்கையாகி அன்றோடு ஆறாவது நாள். பாத்ரூம் போகக்கூட எழுந்திருக்க முடியாமல் படுக்கையிலேயே இருந்துவிட்ட அன்றே எல்லோருக்கும் சொல்லி விடுவது என்று பெண்ணும் மாப்பிளையும் முடிசெய்துவிட்டார்கள்.

கிழவரைப் பார்த்துக்கொண்டது என்னவோ இளைய பெண்தான் என்றாலும் அவள் இருந்தது அவர் வீட்டில். இளையவள் சொந்தத்திலேயே மணமுடித்து இருந்ததால் அவர் வீட்டிலேயே சுவாதீனமாய் மாப்பிள்ளையும் தங்கிவிட்டார். அவர் பார்க்கும் வேலைக்கு அதைப் போல இரண்டு வீடுகளை வைத்துக் கொள்ள முடியும் என்பதால் அக்கம்பக்கத்தில் கூட பெரிய வம்பு எதுவும் எழவில்லை. இன்னுமிருந்த இரண்டு மகள்களில் பெரியவள் கல்கத்தாவிலும் நடுவுள்ளவள் பம்பாயிலும் இருந்தார்கள்.

உடம்பு சுகமில்லாமல்தானே இருக்கிறார் எமெர்ஜென்ஸி எதுவுமில்லையே என்று கல்கத்தாக்காரி திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டிருந்தாள். என்னதான் அப்பா என்றாலும் குறுகிய அவகாசத்தில் புறப்படவேண்டும் என்றால் விமானத்துக்கு சொளையாய் அழுதாகவேண்டுமே என்கிற கவலை அவளுக்கு. அவள் கணவர் இருந்த, அரசு நிர்வாகத்தின் கீழ் பராமரிக்கப்பட்டு வந்த தனியார் கம்பெனியை முழுக்கவும் தனியாருக்குத் தாரை வார்த்துக் கொடுத்ததில் திடீரென்று தங்கக் கைக்குலுக்கல் என்று ஒரு தொகையைக் கொடுத்து மாலையும் பூங்கொத்துமாக அனுப்பி வைத்து விட்டார்கள். முந்தி மணந்தாலும் பிந்திப் பிறந்த மகன்களோ +1 +2வுமாய் கண் விழித்துப் படித்துக் கொண்டிருந்தார்கள். என்னதான் படித்தாலும் எவ்வளவுதான் மதிப்பெண்கள் எடுத்தாலும் எஃப்.சிக்கு காசை அவிழ்க்காமல் பொறியியல் கல்லூரி என்பது கானல் நீர். கைகுலுக்கிக் கொடுத்து அனுப்பியதை வைத்துக் கொண்டு, இன்னும் நான்கைந்து வருடங்களுக்கு நான்கு பேர் உட்கார்ந்து சாப்பிட்டாக வேண்டும். இதற்கிடையில் ஆண்டவன் புண்ணியத்தில் யாருக்கும் உடம்புக்கு ஒன்றும் வராமல் இருக்க வேண்டும் என்பதை நினைக்க நினைக்க அவளுக்கு மலைப்பாக இருந்தது.

அது நாள் வரை, அப்பா இருந்த மெட்ராஸ் வீட்டைப் பற்றியோ, அதன் மதிப்பைப் பற்றியோ, அப்பாவுக்குப் பிறகு அதை விற்க நேர்ந்தால் அதில் தனக்கு எவ்வளவு கிடைக்கும் என்பதைப் பற்றியோ அவள் கனவில்கூட எண்ணிப் பர்த்ததில்லை. அப்பா படுத்தபடுக்கையாய்க் கிடக்கிறார் என்கிற செய்தியைக் கேள்விப்பட்டதிலிருந்து இப்படி ஒரு எண்ணம் தலைக்குள் தட்டாமாலை சுற்றத் தொடங்கிவிட்டது. அந்த நினைப்பை அகற்ற அவ்வப்போது சீ தூ என்று அவளையும் மீறி வாய்விட்டு சொல்லிக்கொண்டு இருந்தாள். இவளுக்கு என்ன ஆயிற்று என்று கணவர் பார்த்துக்கொண்டிருந்தார். அவர் தயிர் சாதம் சாப்பிடத் தொடங்கியதும் தன் தட்டை எடுத்து வைத்துக் கொண்டவளுக்கு இரண்டு வாய் உள்ளே போவதற்குள் குமட்டிக் கொண்டு வந்தது. புடவைத் தலைப்பால் வாயைப் பொத்திக்கொண்டு வாஷ் பேசினுக்குப் போய் வாந்தி எடுத்த பின்னரே சற்று ஆசுவாசமாயிற்று. கணவர் அவள் முதுகையே பார்த்தவண்ணம் இருந்தார். திரும்பியவள் ஒன்றுமில்லை அஜீரணம் கொஞ்சம் ஒய்வெடுத்தால்

சரியாகிவிடும் என்று சொல்லிவிட்டு, போட்டது போட்டபடி படுக்கையறைக்குப் போய் படுத்துவிட்டாள். அப்பாவின் உடல்நிலை மோசம் என்று தெரியவந்தால் எந்தப் பெண்ணால்தான் சகஜமாய் எடுத்துக்கொள்ள முடியும். இருந்தாலும் இதில் அவர் செய்ய என்ன இருக்கிறது ஆறுதல் சொல்வதைத் தவிர. அவளுக்குப் பிறத்தியார் ஆறுதல் சொல்வதா அவளில்லை என்றால் தம் கதியே அதோகதி அல்லவா என்றும் அவருக்குத் தோன்றியது.

அறுபதைத் தொடப்போகிற வயதில் வேலையில்லாப் பட்டதாரி ஆகிவிடுவாய் என்று எந்த ஜோசியனும் சொல்லியிருக்கவில்லை. அவர் வீட்டிலேயே உட்காரத் தொடங்கியபின் ஒரு நாள் தயங்கித் தயங்கி வெளியில் ஏதாவது வேலைக்குப் போகலாமே என்கிற பேச்சை எடுத்தாள். கௌரவமாக விகித்த பதவிக்கு தகுந்தார்போல் வேலை தேடி வெளியில் அலைந்தால் வீண் செலவுதான் மிஞ்சும். வாழ்நாள் முழுவதும் லஞ்சம் வாங்காமல் கௌரவமாய் வாழ்ந்து விட்டதற்கு வட்டியும் முதலுமாய் கன்சல்ட்டண்ட் என்கிற பந்தாவான பெயரில், முன்பின் தெரியாதவர்களுக்கெல்லாம் லஞ்சத்தை வாங்கிக் கொடுக்கும் மாமா வேலை பார்க்க வைத்து விடுவார்கள் என்று பிள்ளைகள் எதிரிலேயே வாய் விட்டு சொல்லிவிட்டார். அன்று முதல் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வது கூடக் குறைந்து விட்டது.

அப்பா பற்றிய செய்தியை தங்கைதான் கைபேசியில் தெரிவித்தாள்.

என்னடீது இருந்தாப்ல இருந்து குண்டடத் தூக்கிப் போடறே.

ஆமாங்க்கா நேத்து ராத்திரிகூட நன்னாதான் இருந்தார். எப்பையும் போல உச்சுக்கொட்டி உச்சுக்கொட்டி சூப்பர் சிங்கர்லாம்கூட படுத்த வாகுலையே நன்னா பாத்துண்டு இருந்தார். படுக்கறதுக்கு மின்ன பாத்ரூமுக்குப் போனதுதான் கடைசி. கார்த்தால கட்டில்லையே போய்ட்டார். அப்பா அப்பாங்கறேன் கண்ணுலேந்து தாரை தாரையா ஜலம்தான் வழியறது. வாயைத் தொறந்து ஒரு வார்த்தை பேச மாட்டேங்கறார் என்று சொல்லிக்கொண்டே போனவள் உடைந்து அழத் தொடங்கிவிட்டாள்.

என்னடீ சொல்றே. டாக்டர் வந்து பார்த்தாரா.

டாக்டார்லாம் டெய்லி வந்து பாத்துட்டு போயிண்டுதான் இருக்கார். ஒரு இம்ப்ரூவ்மெண்ட்டும் இல்லை.

உங்காத்துக்காரரர் என்ன சொல்றார்.

அவர்தான்க்கா, டிக்கெட் கிடைக்கிறது கஷ்டம் கல்கத்தாக்காவுக்கு மொதல்ல சொல்லிடுன்னார்.

அவ என்னடி பண்றா. அவளுக்கு நியூஸ் தெரியுமோ.

அவளாவே சித்த நேரம் மின்ன யதேச்சையா போன் பண்ணி அப்பா என்ன பண்றார். அவரண்ட போனைக் குடு பேசனும் போல இருக்குன்னு கேட்டாக்கா.

என்னடீ சொல்றே.

ஆமாங்க்கா. விஷயத்தைச் சொன்னதும் என் நாக்குல சனிடீனு துடிச்சிப் போயிட்டா. மத்தியானம் ஃப்ளைட்டைப் பிடிக்கறதா சொல்லீருக்காக்கா.

இன்னும் கொஞ்ச நேரம் பேசிக்கொண்டு இருந்திருந்தால், மெட்ராஸ் தங்கை அவளாகவே விமான டிக்கெட் புக்பண்ணிக்கூடக் கொடுத்திருப்பாள் என்பதென்னவோ வாஸ்தவம்தான். ஏற்கத்தான் மனம் வரவில்லை. இதெல்லாம் அவளுக்கு ஒரு பணமேயில்லை என்றாலும் ஏற்றுக்கொள்வது நன்றாகவா இருக்கும் என்று தோன்றியது.

சட்டென ஏதோ தோன்றிற்று. விலுக்கென படுக்கையிலிருந்து எழுந்து ஹாலுக்கு வந்தாள். அவர் செருப்பைக் காணவில்லை. உள் தாழ்ப்பாள் போடப்படாமல் மூடப்பட்டிருந்த கதவு வெறிச்சென்று இருந்தது. அவர்தான் கதவுப் பூட்டைப் பூட்டிக்கொண்டு போயிருக்கிறார். இன்னொரு சாவி டிவி பக்கத்தில் இருந்தது. கண் அணிச்சையாய் அந்தப் பக்கம் பார்த்து சாவி இருப்பதை உறுதி செய்துகொண்டது. ட்ரெயினுக்கு டிக்கெட் புக் பண்ணதான் போயிருப்பார். அவர் வீட்டிலிருக்க ஆரம்பித்தது முதலாகவே பசங்கள் படிப்பு கெடும் என்கிற காரணத்தை வைத்து இண்ட்டர்நெட்டைத் துண்டித்தாயிற்று. இந்த இழவெடுத்த சூப்பர் சிங்கர் மட்டும் இல்லையென்றால் டிவியையும் துணிபோட்டு மூடி வைத்து விடலாம். சின்ன வயதில் பாட்டு கற்றுக் கொண்ட பாவத்துக்குக் கேட்காமல் இருக்க முடியவில்லை.

அப்பாதான் அவள் பாட்டு கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஒற்றைக் காலில் நின்றார். அவள் பாட்டுக் கச்சேரி அரங்கேற்றம் தெருக்கோடிப் பிள்ளையார் கோவில் மண்டபத்தில் விமரிசையாக நடந்தது. அதைப் பார்க்க அம்மாவுக்குதான் கொடுத்து வைக்கவில்லை. அதற்குள் போய்ச் சேர்ந்துவிட்டாள். மூன்று பெண் குழந்தைகளையும் அம்மாவுக்கு அம்மாவாய் இருந்து அப்பாதான் வளர்த்தார். இதே மாதம் விஜயதசமியன்றுதான் அம்மா போய்ச் சேர்ந்தாள். இன்னும் இரண்டு நாட்களில் விஜயதசமி என்பது நினைவுக்கு வர வயிற்றில் பந்து சுருண்டது. அவருடைய அம்மாப் பாட்டியின் சாயலில் அவள் இருப்பதால்தான் பாட்டியைப் போலவே அவளுக்கும் பாட்டு நன்றாக வருகிறது என்று வாய்க்கு வாய் சொல்லி மாய்ந்து போவார் அப்பா. பெண் பார்க்க வந்தபோது பாடியதுதான் கடைசி. கல்யாணம் முடிந்து கல்கத்தாவுக்கு வந்து சேர்ந்தபின் குழந்தை குழந்தை என்று பத்து வருஷம் கண்ட கண்ட மருந்து மாத்திரைகளைத் தின்று, பிள்ளைப் பேறுக்கு முன்பே உடல் பெருத்து குரல் முரடாகிப் போனது.

அவர் டிக்கெட் புக் பண்ணியாயிற்று என போன் பண்ணுவதற்குள் அப்பா எழுந்து உட்கார்ந்துவிட்டார் என்கிற செய்தி வந்துவிடட்டும் என்று ஒரு ரூபாய் நாணயத்தை மஞ்சள் துணியில் முடிந்து சுவாமி முன் வைத்தாள். பக்கத்தில் இருந்த பித்தளைப் பெட்டியில் கல்யாணம் ஆனது முதல் முடிந்து வைத்தவை வேண்டிய மட்டுக்கும் இருந்தன. சில பிரார்த்தனைகள் நிறைவேறியிருந்தன பல நிறைவேறியதில்லை என்கிற எண்ணம் மின்னல் கோடாய் நெளிந்து மறைந்தது. தெய்வ குத்தம் என்று கை அணிச்சையாய் மோவாயைத் தொட்டுக்கொண்டது.

***

அப்பாவைக் கண்கொண்டு பார்க்க சகிக்கவில்லை. பார்த்ததும் முதலில் தோன்றிய நினைப்பே எப்போது வேண்டுமானாலும் போய்விடுவார் என்பதுதான். சகோதரிகளிடம் வாய் விட்டு சொல்லியேவிட்டாள்.

என்னடீது இப்படி இருக்கார். நாளைக்குத் தாண்டுவாரான்னே தெரியலையேடீ.

ஒரு வாரமாவே இப்படிதான்க்கா இருக்கார். எவ்ளோ மாத்திரை மருந்து குடுத்தும் ஜுரம் எறங்கவே மாட்டேன்றது.

நெற்றியிலிருந்த ஈரத் துணியைத் திருப்பிப் போட்டாள் இளையவள்.

இப்படிதானடி ஒரு விஜயதசமையன்னைக்கு அம்மா போய்ச் சேந்தா என்றாள்.

வாய அலம்புடீ என்றபடி பம்பாய்க்காரி விசுக்கென இடம் விட்டு அகன்றாள்.

மாப்பிள்ளை, டாக்டர் மாமாவைக் கூட்டிக்கொண்டு வந்தார். அவர் அப்பாவின் பால்யகால சிநேகிதர். அப்பாவும் அவரும் ஒரே தெருவில் ஒன்றாக விளையாடியவர்கள் என்று அப்பா அடிக்கடி சொல்லிக்கொண்டிருப்பார்.

என்னைக் கூப்பிடணும்னு உங்களுக்குலாம் இப்பதான் தோணித்தா என்று கேட்டபடியே உள்ளே நுழைந்தார்.

அப்பாவின் அருகில் சென்று நெற்றியில் கைவைத்துப் பார்த்தவர், டேபிள் ஃபேன் பெடஸ்டல் ஃபேன்னு பக்கத்தாத்து அக்கத்தாத்துல இருக்கறதையெல்லாம் கொண்டாந்து சுத்தி வைங்கோ. அனல் இங்க அடிக்கிறது. என்று உருட்ட ஆரம்பித்துவிட்டார்.

மாமா பொழச்சுப்பாரா என்றாள் பெரியவள் மெல்லிய விம்மலுடன்.

என்னை எதுக்குக் கூப்ட்ருக்கேள். அவ்ளோ சுலபத்துல இவனைப் போக விட்றுவேனா.

மாமா எதோ எங்க ஆறுதலுக்காக சொல்றேள். எனக்கென்னவோ நம்பிக்கையே இல்லை.

நீ எப்ப வந்தே.

நீங்க வரதுக்கு அரை மணி மின்ன.

இப்பதான வந்தே. ஒரு வாரமா இவனோடையே இருந்தா மாதிரி பேசறே.

அதுக்கில்லே... புடவைத் தலைப்பால் வாயைப் பொத்திக்கொண்டாள்.

டாக்டர் மாமா போன் போட்டார். யார் யாரோ வந்தார்கள். ஆம்புலன்ஸ் வந்தது. அப்பா ஆபத்தான கட்டத்துக்குப் போய்கொண்டு இருக்கிறார். ஹாஸ்பிடலுக்கு அழைத்துக்கொண்டு போகப் போகிறார் என்று பெரியவள் நினைத்தாள். கிசுகிசுத்த குரலில் சகோதரிகளிடம் அரற்றவே ஆரம்பித்துவிட்டாள், அவ்ளதான் போல. நேக்கென்னவோ பயமா இருக்குடீ என்று.

ஹாலில் வேட்டியை விரித்து அப்பாவைக் கட்டிலிலிருந்து அப்படியே தூக்கிக் கீழே படுக்க வைத்தார். ஃபேன் காற்றில் அசைந்த நாலுமுழ வேட்டியைத் தவிர ஒற்றை அசைவு இல்லாது பொம்மைபோல நடுக்கூடத்தில் படுக்கவைக்கப்பட்டிருந்தார் அப்பா. டாக்டர் மாமா என்ன செய்கிறார் என்று யாருக்கும் ஒன்றும் புரியவில்லை.

ஆம்புலன்ஸிலிருந்து ஆளுயரத்துக்கு நீளநீளமாய் இருண்டு ஐஸ் பார்களை நாலைந்து பேர் கொண்டு வந்து அப்பாவுக்குப் பக்கவாட்டில் வைத்தார்கள். ஸ்கூல் விட்டு வந்த குழந்தைகள் இரண்டும் யூனிஃப்பாரத்தைக்கூடக் கழற்றாமல் விதிர்த்துப் பார்த்துக்கொண்டு இருந்தன.

அப்பா பக்கத்தில் சேர் போட்டு உட்கார்ந்துவிட்டார் டாக்டர் மாமா.

ஒருத்தர் ஒரு வார்த்தை பேசவில்லை.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் உட்கார்ந்திருந்தவர் நெற்றியைத் தொட்டுப் பார்த்தார். அப்பாவின் மணிக்கட்டைப் பிடித்துப் பார்த்துவிட்டு, அரை மணி கழிச்சு போன் பண்ணுங்கோ என்று மாப்பிள்ளையிடம் சொல்லிவிட்டு பயப்பட ஒண்ணுமில்லே எழுந்துடுவான். கொஞ்சமா கஞ்சி ரெடி பண்ணி வெச்சுக்குங்கோ என்று சொல்லிவிட்டுக் கிளம்பிப் போயே விட்டார்.

என்னடீது. இந்த மனுஷன் எதோ ஜோசியக்காரராட்டமா இப்படி சொல்லிட்டுப் போயிட்டார். அவர் நெலமை எழுதிருக்கிறா மாதிரியா இருக்கு என்று புலம்பத் தொடங்கிவிட்டாள் பெரியவள். இரண்டு சகோதரிகளும் எவ்வளவு சொல்லிப் பார்த்தும் அவள் வாய் ஓய்வதாக இல்லை. எதோ பிரமை பிடித்தவள் போல அவர் எழுந்திருக்கமாட்டார். எனக்கு நம்பிக்கையில்லே என்று வறண்ட கண்களும் கம்மிய தொண்டையுமாய் சொன்னதையே திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டு இருந்தாள்.

விளக்கு வைக்கும் நேரம் ஆகிவிட்டது. அப்பாவிடம் எந்த அசைவுமில்லை. கஞ்சி ஆடைகட்டி விட்டிருந்தது. பெரியவளின் அரற்றல் வேறு, எல்லோரையும் மிக மோசமான இரவை எதிர் நோக்க வைத்துக்கொண்டு இருந்தது.
அப்பாவின் கட்டைவிரல் ஆடியதை முதலில் பெரியவள்தான் பார்த்தாள். பார்த்தவள், மிரட்சியுடன் சுற்றுமுற்றும் பார்த்தாள். அவள் முகத்திலிருந்த பீதியில் மிரண்டவர்களாய் மற்றவர்கள் அப்பாவைப் பார்த்தார்கள். அவர் மெல்ல கை கால்களை அசைக்கத் தொடங்கி இருந்தார்.

குதூகலத்தில் வீடே திமிலோகப்பட்டது.

பெரியவள் அப்பாவையே வெறித்துப் பார்த்தபடி இருந்தாள். அவளை யாரும் கவனிக்கக்கூட இல்லை.

டாக்டர் மாமா கூறியது போல கொஞ்ச நேரத்தில் அப்பா எழுந்து உட்கார்ந்து விட்டார். இளையவள் ஸ்பூனில் ஊட்டிய கஞ்சியை சப்புக்கொட்டி சாப்பிட்டபடி அவளைப் பார்த்து, நெஞ்சுக் கூட்டில் மூச்சிளைக்க, என்னடீ எப்டி இருக்கே எப்போ வந்தே மாப்ள சௌக்யமா இருக்காரா பசங்கள்ளாம் எப்டி இருக்கா என்றார்.

அவள் வெடித்து அழுதாள்.

ஏன் அழுகிறாள் என்று அவர் உட்பட யாருக்கும் புரியவில்லை. எல்லோரும் அவளை விநோதமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

(மார்ச் 2016)
ஆனந்த விகடன்

# வரிக் குதிரைகள்
## விமலாதித்த மாமல்லன்

வரி வசூலிப்பதற்காகவும் வரி ஏய்ப்பைத் தடுப்பதற்காகவும் என்றே, வெள்ளைக்கார துரைகள் ஆண்ட காலத்திலேயே பிரத்தியேகமாய் உருவாக்கப்பட்டிருந்தது அந்த அரசுத் துறை. நகரத்தின் மத்தியில் இருந்தது அதன் பிரதான அலுவலம்.

தலையில் கைவைத்தபடி தம் அறையில் அமர்ந்திருந்தார் பஞ்சநாதன். பல பெயர்கள் எழுதப்பட்டு அவை பற்பல அடித்தல் திருத்தல்களுக்கு உள்ளாகி போர்க்களம் போல் காட்சியளித்தது அவர் மேசை மீது இருந்த காகிதம். எப்படிப் போனாலும் இடித்து அது ஏற்படுத்திய தலைவலி, பஞ்சநாதனைத் தெறிக்க வைத்துக்கொண்டு இருந்தது.

அவரது நீண்ட பணிக்காலத்தில், நேர்மையான அதிகாரி என்பதாக மட்டுமின்றி நல்ல மனிதர் என்றும் எல்லோரிடமும் எடுத்திருந்த நற்பெயரை, அந்தப் பட்டியல் தயாரிப்புப் பணி தரை மட்டமாக்கிவிடப் போகிறது என திடமாக நம்பினார். எல்லாம் விதி. விதி, புதிய ஆணையர் ரூபத்தில் தம் வாழ்வில் பகடை உருட்டிக்கொண்டு இருப்பதாய் அவருக்குத் தோன்றியது.

புதிய ஆணையர், நாட்டின் வட கோடியிலிருந்து அந்த அலுவலகத்துக்கு மாற்றலாகி வந்து பொறுப்பேற்றுக்கொண்ட முதல் நாளே, மூன்று அமைப்புகளிடமிருந்து, மனித உரிமை ஆணையத்துக்கு அனுப்பப்பட்டிருந்த புகார்களின் நகல்கள், அவர் மேசைக்கு வந்து சேர்ந்திருந்தன. வேறு ஒருவராய் இருந்திருந்தால் ரத்த அழுத்தம் எகிறி இருக்கும். ஆனால் வட நாட்டு ஆணையரோ யானை காண்டா மிருகங்களை எல்லாம் பார்த்து விட்டு வந்திருந்த அனுபவஸ்தர். அந்தப் புகார்களைப் பார்த்ததும், அந்தப் பிராந்தியத்தின் சூட்சும முடிச்சு பிடிபட்டவராய் முறுவலித்துக்கொண்டார்.

முதல் வேலையாய், தம் உதவியாளரை அழைத்து, ஊழியர் மற்றும் அதிகாரிகளின் பட்டியலைக் கேட்டார். அவரவர் பெயருக்கு எதிரில் பதவி மற்றும் ஜாதி குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்று கூறினார். எதிர்பார்த்ததைப் போலவே, உதவியாளர் அவர் கேட்ட பட்டியலைத் தயாரிக்க அதிக நேரம் எடுத்துக்கொள்ளவில்லை. நெடுங்காலமாய் அங்கேயே பிஏவாக இருக்கும் அவர் நினைவிலேயே அந்த அலுவலக ஊழியர்களின் ஜாதிப் பட்டியல் தயார் நிலையில் இருந்திருக்கும் என்ற தமது எண்ணம் ஊர்ஜிதப்பட்டதில் உள்ளூர சிரித்துக்கொண்டார்.

முதல் நாள் என்பதால், கீழ் மட்ட ஊழியர் முதல் அடுத்த நிலை அதிகாரிவரை, கையில் எலுமிச்சைப் பழத்துடன் அவரைப் பார்க்க அனைவரும் வந்திருந்தனர். ஆணையராய் அவர் பதவியேற்றதை வாழ்த்த வந்தவர்களில், அவரை வசீகரித்த முகங்களிடம் மட்டும், பார்வையாளர் நேரத்தில் தனியே வந்து தம்மைச் சந்திக்கும்படிக் கூறிக் கை குலுக்கி வைத்தார். அழைக்கப்பட்டவர்களுக்கு தலை கழுத்தில் நிற்கவில்லை. அன்றைய பார்வையாளர் நேரம் ஊழியர் மற்றும் அதிகாரிகள் வரிசையால் நீண்டிருந்தது. அதி முக்கிய வேலை காரணமாய் ஆணையர் அடுத்த நாள் சந்திப்பார் எனக் கூறி, அவரைக் காண வந்தத் தொழில் அதிபர்கள்



RangaRakes tamilnavarasam.com

வரவேற்பறையிலேயே, பவ்வியமாய் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டனர். அதிகாரிகளும் ஊழியர்களும் தமக்கு அளிக்கப்பட்டிருந்த தனித்துவம் குறித்து, நல்ல மனிதர் ஒருவர் தமக்கு ஆணையராய் வந்திருக்கிறார் என உள்ளூரப் பூரித்துக்கொண்டு இருந்தனர்.

தனித்தனியாய் சந்தித்த அவர்கள் ஒவ்வொருவரிடமும் அவர் விசாரித்தது ஒரே ஒரு விஷயத்தைதான்.

பணியிலும் சரி மனிதராகவும் சரி, அந்த அலுவலகத்திலேயே நேர்மையானவர் என்று அவர்கள் எண்ணும் மூன்று நபர்களைக் குறிப்பிடும்படிக் கேட்டார்.

தம்மிடமிருந்த பட்டியலில் அவரவர் பெயருக்கு நேராக அவர்கள் குறிப்பிட்ட மூவரின் பெயர்களைக் குறித்துக்கொண்டார். முடிவில், எல்லோரும் ஒருவர் பெயரைத் தவறாமல் குறிப்பிட்டிருந்தது தெரிய வந்தது. ஆனால் அந்தப் பெயருக்கு உரியவர் எவ்வகையிலும் வசீகரித்திராத காரணத்தால், ஆணையர் அவரைத் தனிச் சந்திப்புக்கு ஆழைத்திருக்கவில்லை. தம் கணிப்பின் துல்லியம் அவருக்கு நிறைவை அளித்தது.

அந்த அதிகாரி அதுவரை ஏற்றிருந்த பொறுப்பு வரலாற்றைக் கேட்டு வாங்கினார். எல்லோரும் குறிப்பிட்டிருந்த பஞ்சநாதன், புள்ளிவிவரம் சட்டம் லஞ்ச ஒழிப்பு போன்ற எவ்வித கவர்ச்சியுமற்ற பிரிவுகளிலேயே நெடுங்காலமாய் திரும்பத் திரும்ப உழன்றுகொண்டு இருந்தார். அழைப்பு மணியை அழுத்தி, பஞ்சநாதனை அழைத்துவரச் சொன்னார்.

உள்ளே வந்தவரை, ஏறிட்டுகூடப் பார்க்காமல் உட்காரச் சொன்னார் ஆணையர். தமக்கு வந்திருந்த, மனித உரிமை ஆணையத்துக்கு அனுப்பப் பட்டிருந்த புகார்களின் நகல்களை அவரிடம் கொடுத்தார். ஒரு சில வார்த்தைகள் முன் பின்னாய் மாறியிருந்ததைத் தவிர, அவரவர் ஜாதிகளுக்கு பிரதான பொறுப்புகள் அளிப்பதில் முன்னுரிமை அளிக்கப்படாமல் அநீதி இழைக்கப்படுவதாய் ஒரே மாதிரியாய் அவை புகார் வாசித்தன.

அதிகாரிகளுக்கான அந்த ஆண்டின் வருடாந்தரப் பணி மாற்றல், அதற்கு முந்தைய ஆணையரால் பிறப்பிக்கப்பட்டு, பணம் விளையாடிவிட்டதாய் புகார்களுக்கு உள்ளாகி பலத்த அதிருப்தி ஏற்பட்டு இருந்தது. எனவே குறைந்த பட்சம் அந்தத் துறையின் ஆதாரப் பிரிவான வரி ஏய்ப்புத் தடுப்புப் பிரிவின் ஆணையிலேனும் எவராலும் எவ்வித ஆட்சேபணையும் எழுப்ப முடியாதவண்ணம் எல்லா பிரிவினருக்கும் சம வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்பதே தமது விருப்பம் என்றார். அதற்காகவே அந்த அலுவலகத்தில் நியாயமானவர் என்று அனைவரும் கூறும் அவரிடம் அந்தப் பிரிவின் ஐந்து குழுக்களுக்குமான பட்டியலைத் தயாரிக்கும் பொறுப்பை அளிப்பதாகவும் கூறி அனுப்பி வைத்தார்.

ஏழரை நாட்டுச் சனி பிடித்துவிட்டதாய் உள் மனத்தில் உணர்ந்தாலும் எஸ் சார் என்று மட்டும் கூறி, கொடுக்கப்பட்ட பெயர்ப் பட்டியலைப் பேண்ட் பாக்கெட்டில் மடித்து வைத்துக்கொண்டு வெளியேறினார் பஞ்சநாதன்.

ஐந்து குழுக்களுக்கான ஐந்து மூத்த அதிகாரிகளையும் ஒவ்வொரு குழுவுக்குமான ஐந்து உதவி அதிகாரிகளையும் ஜாதி வாரியாய் குறித்துப் பிரித்து வைத்துக் கொண்டார். ஒவ்வொரு குழுவிலும் ஆண்ட ஜாதி தாழ்த்தப்பட்ட ஜாதி இடைநிலை ஜாதி கடைநிலை ஜாதி ஆதிக்க ஜாதி ஆட்சியில் இருக்கிற ஜாதி என்று எல்லோருக்கும் இடத்தை ஒதுக்கி பெயர்களை மறைத்து நிர்தாட்சண்யமாய் ஒரு வரைவை உருவாக்கி, அடுத்த அரை மணி நேரத்தில் ஆணையரிடம் சமர்ப்பித்தார்.

இல்லையில்லை. இவர் இந்தக் குழுவில் இருந்தாக வேண்டும் என்று ஏற்கெனவே மந்திரியின் பிஏ கூறியுள்ளார் என்று அடித்துத் திருத்தினார் ஆணையர். பஞ்சநாதன் முகத்தில் தெரிந்த கவலையின் சுருக்கங்களைக் ஓரப்பார்வையாய் கவனித்தவர்,

ஏன். என்ன விஷயம் என்றார்.

ஒன்றுமில்லை.

நியாயமாய் இருப்பது மட்டுமின்றி நியாயமாக இருப்பதாக மற்றவர்கள் நினைக்கும்படியாகவும் இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் இந்தப் பொறுப்பை உங்களிடம் ஒப்படைத்தேன். எதுவாக இருந்தாலும் வெளிப்படையாய்க் கூறுங்கள்.

இல்லை. அவரை அந்தக் குழுவில் சேர்க்க முடியாது சார்.

ஏன். ஒருவரைச் சேர்ப்பதில் அப்படி என்ன பெரிய பிரச்சனை வந்துவிடப்போகிறது.

இல்லை. அவரை அங்கு சேர்க்க முடியாது சார். குறிப்பிட்ட ஜாதியை அதீதமாய் ஆதரிப்பதாகக் குற்றச்சாட்டு எழும். மன்னியுங்கள்.

அரே பாபா. அவர் மதமே வேறு. சிறுபான்மையினருக்கான ஒதுக்கீட்டையும் அமல்படுத்தியதாக சொல்லிக்கொள்ள இது ஒரு நல்ல வாய்ப்பு ஆயிற்றே. அதை நான் பார்த்துக் கொள்கிறேன் இதற்கெல்லாம் அநாவசியமாய் நீர் தலையைக் கெடுத்துக் கொள்ளாதீர்.

சாரி சார். ஒரு குழுவில் ஒரே ஜாதியில் இருவர் இருப்பது ஆட்சேபணைக்கு உள்ளாகும் சார். அவர் வேற்று மதத்தவர் என்றாலும் இரண்டு தலைமுறைக்கு முன்பாக, இந்தக் குழுவில் இருக்கும் மூத்த அதிகாரியின் ஜாதிதான் சார் அவரும்.

அப்புறம் எப்படி இவரை மந்திரியின் சொந்தக்காரர் என்கிறார் அவரது பிஏ.

எந்த மதமாக இருந்தாலும் ஜாதி அதேதான் என்பதால் அவர்கள் சொந்தக்காரர்கள்தான் சார். அது போக இந்த உதவி அதிகாரி இந்த மாநிலத்தின் எதிர்க்கட்சியில் நமது துறையின் மந்திரியை எதிர்த்து நின்று தோற்றவரின் சகலையும்கூட. அரசியல் வேறுபாடுகளைத் தாண்டி என்ன

இருந்தாலும் ரத்த சொந்தம் வலுவானது அல்லவா. எனவேதான் இருவரையும் ஒரே குழுவில் இருக்க வைக்க இவ்வளவு அழுத்தம் அளிக்கிறார்கள்.

எனக்கு ஒரு இழவும் புரியவில்லை. மதமும் வேறு அரசியலில் கூட எதிரெதிர் கட்சி ஆனால்...

மன்னியுங்கள் சார். மதம் வித்தியாசப்பட்டாலும் ஜாதி வேறுபடாமல் இருக்க பல உதாரணங்கள் உண்டு சார். எங்கள் ஊரில் எப்போது வேண்டுமானாலும் மதத்தை மாற்றிக்கொள்ளலாம் ஆனால் ஜாதி எப்போதுமே மாறாது சார். குறிப்பிட்ட ஜாதியினர் வட நாட்டில் குறிப்பிட்ட மதங்களுக்கு மாறுவது சகஜம் இல்லையா. மதம் மாறிய பின்பும் சட்டப்படி சலுகைகள்கூட மாறுவதில்லை அல்லவா அது போலத்தான் இதுவும். எங்கள் ஊரில் ஜாதிதான் சார் எழுதப்படாத சட்டம். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஜாதிகள் உருவாக்கப்பட்டதாய் இன்னும் இரண்டாயிரம் ஆண்டுகளுக்குக் கூறிக்கொண்டு இருப்பதில் எல்லோருக்கும் பல சௌகரியங்கள் இருக்கின்றன சார்.

மந்திரியின் பிஏவுக்கு பதில் சொல்லியாக வேண்டியவர் அவர். ஆகவே அதை மாற்ற முடியாது. வேறு எப்படியாவது எதையாவது செய்து சமாளித்துக்கொள்ளவும் என முகத்திலடித்தார் போலச் சொல்லி பஞ்சநாதனை அனுப்பிவிட்டார் ஆணையர்.

தாம் கொஞ்சம் அதிகம் பேசிவிட்டோமோ அதனால்தான் ஆணையர் தம்மைப் பட்டென அனுப்பிவிட்டாரோ என்று பஞ்சநாதனுக்கு உள்ளூரக் குடைந்தது.

வரி ஏய்ப்புத் தடுப்புப் பிரிவின் குழுக்களை அமைக்கும் பொறுப்பு பஞ்சநாதனிடம் அளிக்கப்பட்டிருக்கும் விஷயம் மெல்ல கசியத் தொடங்கியதும் அதிகாரிகளின் படையெடுப்பு தொடங்கிற்று.

என் குழுவில் இவர் வேண்டும். இவர் வேண்டவே வேண்டாம்.
இவன் எந்த வேலைக்கும் ஆக மாட்டான் எனவே இவனை என் குழுவில் தயவு செய்து போட்டுவிட வேண்டாம்.
இவனைக் கொண்டு எதையும் சாதிக்கலாம் எனவே இவன் கட்டாயம் என் குழுவில் இருந்தே ஆக வேண்டும்.
அண்ணன் பையன். அவனை எங்கே வேண்டுமானாலும் போடுங்கள் ஆனால் தயவுசெய்து அவரிடம் மட்டும் போட்டுவிட வேண்டாம். மிகவும் சிரமப்பட்டு வாங்கிய போஸ்ட்டிங் இது மொத்தமும் பாழாகிவிடும். எனவே பார்த்து செய்யுங்கள்.
ஒன்றுவிட்ட அக்காள் பையன் அவனை, கொஞ்சம் நியாயத்துக்குக் கட்டுப்பட்டவரான அவர் குழுவில் போடுங்கள், என்று யார் யாரிடமிருந்தோ கெஞ்சல்கள் கொஞ்சல்கள் அழுத்தங்கள்.

சரி சரி என்று எல்லோருக்கும் பணிவோடும் பண்போடும் தலை அசைத்த பஞ்சநாதன் ஆளுக்கொன்றாய் அவரவர் சொன்ன எதையும் சட்டை செய்யவில்லை. ஆணையர் அடித்துக் கொடுத்திருந்த தலைவலியே ஒரு ஜென்மத்துக்குப் போதுமானதாய்த் தோன்றியது. மந்திரி பிஏவின் சிபாரிசு

காரணமாய் உருவான ஆணையரின் அடித்தலை சரிக்கட்ட எல்லாக் குழுவிலும் ஏதாவது ஒரு ஜாதிக்கு இரண்டிரண்டு பேர்களாகப் போட்டு நிரவப் பார்த்தார். இரண்டு குழுக்களில் ஜாதிக்கான சம ஜோடி கிடைக்காமல் அல்லாட நேர்ந்தது. அடித்துப் பிடித்து, ஒரு குழுவில் இருந்த ஒரு ஜாதியின் முற்றிலும் மணவினைகள் கூட செய்யத் தயங்கும் உயர் பிரிவிலிருந்து ஒருவரைப் போட்டு இரண்டும் ஒன்றுதான் என்பது போல ஒப்பேற்றினார். ஒரு குழு எப்படியும் சரி செய்ய முடியாதபடி உதைத்தது. அந்தக் குழுவில் இரண்டாவது ஆளை தம் ஜாதிக்குக் கொடு என்று எல்லோரும் கூப்பாடு போடுவார்கள். அதை எப்படி சமாளிப்பதென்று மலைப்பாய் இருந்தது. இதற்காகவென்று புதிதாய் மாற்றல் ஆணை பிறப்பித்து வரி ஏய்ப்புப் பிரிவுக்கு ஆட்களைக் கொண்டு வருவதும் முடியாத காரியம். ஏற்கெனவே அந்த ஆணையில் பணம் விளையாடிவிட்டதாய் எழுந்திருந்த புகைச்சலை அது நெருப்பாக்கிவிடும். போகவும் பதிலுக்கு, இருப்போரில் எவரையும் மாற்றவும் முடியாது. மாற்றினால், சங்கிலித் தொடராய் ஒட்டுமொத்த அலுவலகத்துக்கும் வருடாந்தர மாற்றல் ஆணையையே புதிதாய்ப் போட வேண்டி வரும். புதிய இழுபறியில் மேலும் இரண்டு நாட்கள் ஓடிவிட்டன. அதுவரை எல்லோருக்கும் நல்லவராய் இருந்த பஞ்சநாதன், என்ன இருந்தாலும் தம் ஜாதி புத்தியைக் காட்டத் தொடங்கிவிட்டார் என்கிற அரசல் புரசலான பேச்சுக்கு ஆளாகத் தொடங்கியிருந்தார்.

தங்களைக் கலந்து ஆலோசிக்காமல் வரி ஏய்ப்புப் பிரிவுக்கான குழுக்கள் அமைக்கப்பட்டால், தங்கள் இனத்துக்கான நியாயமான வாய்ப்பு மறுக்கப்பட்டால், உயர் நீதி மன்றத்தில் ரிட் போட்டு தடை வாங்கவும் தயங்க மாட்டோம் என்று ஜாதிவாரி சங்கங்கள் நேரடியாக ஆணையரைச் சந்தித்து அழுத்தம் கொடுக்கத் தொடங்கின.

அவர் பஞ்சநாதனை அழைத்தார்.

ஜாதி சங்கப் பிரதிநிதிகளின் எதிரிலேயே வைத்து விஷயத்தை சுமுகமாய் முடிக்கப் பார்த்தார்.

தாம் பலிகடா ஆகாமல் தப்பித்தால் போதும் என்கிற பயம் பஞ்சநாதனைத் தொற்றிக்கொண்டது.

தம் கையில் இருந்த காகிதங்களை அப்படியே ஆணையரிடம் நீட்டினார்.

ஐந்து அதிகாரிகளும் இருபத்து ஐந்து உதவி அதிகாரிகளும் யார் யார் என்பது, முந்தைய ஆணையரால் போடப்பட்ட ஆணை என்பதால் எல்லோருக்கும் தெரிந்ததுதான். எனவே நீங்களே காட்டுங்கள் பஞ்சநாதன் என்றார் ஆணையர்.

ஒவ்வொரு நாளும் அடித்துத் திருத்தி மாறிய வண்ணம் இருந்துகொண்டிருந்த, தேதிவாரியாய்க் குறிப்பிடப்பட்டிருந்த ஜாதிவாரி அதிகாரிகளின் அத்தனைப் பட்டியல் வரைவுகளையும் அப்படியே மேசை மீது வைத்தார்.

அதிக உறுப்பினர் பலம் கொண்ட முக்கியமான மூன்று ஜாதி சங்கங்களும் பட்டியலை மும்முறமாய் பரிசீலிக்கத் தொடங்கின. ஆணையரின் தனியறையில் இருக்கிறோம் என்ற எண்ணத்துடன் தாழ்ந்த குரலில் கண்ணியமாய்த் தொடங்கிய விவாதம், கொஞ்ச நேரத்திலேயே குரல் உயர வார்த்தைகள் ஒருமையில் தடிக்க, விவகாரம் ஆகத் தொடங்கிற்று. அது ஆணையர் அறை என்பதை பஞ்சநாதனைத் தவிர அனைவரும் மறந்துவிட்டிருந்தனர். பஞ்சநாதன் அறையில் போய் விரிவாக விவாதித்து முடிவெடுக்கும்படி அவர்களிடம் கூறினார் ஆணையர். அவர்கள் ஒருமித்து எடுக்கும் முடிவை அப்படியே ஆணையாக்கித் தாம் கையெழுத்திடத் தயாராய் இருப்பதாகவும் தெரிவித்து அவர்களை அனுப்பி வைத்தார்.

அரை மணி நேரத்துக்குள் பஞ்சநாதனை அழைத்தார்.

என்ன ஆயிற்று ஏன் இன்னும் வரைவு முடிவாகவில்லை என்றார். இவ்வளவு சர்வீஸ் போட்ட சீனியரான உமக்கு இதைச் செய்ய இவ்வளவு நாட்கள் தேவைப்படுகின்றன என்பது குறித்து அவமானமாக இல்லையா என்று கேட்டார்.

கூனிக்குறுகி தலை கவிழ்த்து பஞ்சநாதன் கொஞ்ச நேரம் நின்று பார்த்தார். அதற்கு மேல் ஆணையரிடமிருந்து எந்த வார்த்தையும் வரவில்லை. இவர் பக்கம் அவர் திரும்பவுமில்லை. விடைபெற்றுக் கொள்வதாய்த் தெரிவித்துவிட்டு நேராகத் தம் அறைக்கு வந்தார்.

என்ன செய்வீர்களோ ஏது செய்வீர்களோ தெரியாது. 10:30 – 12:00 ராகு காலம். அது முடிந்ததும் வரி ஏய்ப்புத் தடுப்புப் பிரிவு அதிகாரிகளின் ஆணையை வெளியிட்டாக வேண்டும். அன்று அமாவாசை நல்ல நாள். என்ன ஆனாலும் அன்றே வேலை ஆரம்பித்தாக வேண்டும் என்பது ஆணையரின் கட்டளை. அன்றைய தினத்தைத் தவறவிட்டால் அடுத்த அமாவாசைதான் ஆணை வெளியிட நல்ல நாள் என்கிறார் ஆணையர். அப்புறம் உங்கள் இஷ்டம் என்றார் பஞ்சநாதன்.

இருப்பதே பன்னிரண்டு மாதங்கள். அதுவரையிலேயே கிட்டத்தட்ட பத்துப் பதினைந்து நாட்கள் அந்த மாதத்தில் போய்விட்டன. இன்னும் ஒரு மாதம் காத்திருப்பது எல்லா ஜாதி உறுப்பினர்களுக்கும் பெரும் இழப்பு என்பதால் ஜாதி பேதமின்றி அனைத்து சங்கங்களும் உடனடியாய் உள்ளது உள்ளபடி இருந்துவிட்டுப் போகட்டும் என்று அந்தப் பட்டியலை ஒரு மனதாய் அப்படியே ஒப்புக்கொண்டன. ஆணையர் கையொப்பமிட உடனே வெளியாயிற்று வரி ஏய்ப்புத் தடுப்புப் பிரிவுக்கான அதிகாரிகளின் ஆணை. குழுக்களின் தலைமைப் பொறுப்பேற்றிருந்த மூத்த அதிகாரிகள் ஐவரும் 12:05க்கு ஆணையரை நேரில் சந்தித்து நன்றி கூறினர்.

எல்லோரது செல் போன்களையும் மேசை மீது வைத்து முற்றாக அணைக்கச் சொன்னார். அதற்குப் பின் பேசத் தொடங்கினார் ஆணையர்.

இது சென்ற ஆண்டின் வரி வசூலுக்கான அரசு அளித்த இலக்கு. இதற்கு மேல் பத்து சதமானம் வைத்தால் இந்த ஆண்டிற்கான டார்கெட். அப்போதைக்குக்

ரொம்பக் கேவலமாய் இருந்தாலும் பொருளாதார ஆண்டிறுதியில் இலக்கைக் கிட்டி முட்டி எட்டி விடலாம். அது எப்படியும் வசூலாகிவிடும்.

அவர்கள் எல்லோரும் சீனியர்கள். எல்லோருக்கும் பத்து மாத மருத்துவ விடுப்பு இருக்கும். எழுதிக்கொடுத்துவிட்டு வீட்டில் உட்கார்ந்தால் சம்பளம் தானாக வந்துவிடும். சம்பளத்துக்காக அலுவலகம் வரவேண்டும் என்று அவர்களுக்கு என்ன முடை. கைக்காசைச் செலவழித்து பெட்ரோல் போட்டுக்கொண்டு அன்று அலுவலகம் வந்ததற்கு என்ன பயன் என்று பார்க்க வேண்டாமா. அவர்களுக்குள் எவ்வளவு பிரிவுகள் பிரிவினைகள் இருந்தாலும் எல்லோருக்கும் குறிக்கோள் ஒன்றுதான் இல்லையா. எல்லோரும் அதில் கவனத்தைக் குவிக்க வேண்டும். அவருக்கும் அவர்களுக்கும் இடையில் எந்த பேதமும் இல்லை. அவர் படித்தார் பரிட்சை எழுதிப் பாஸானார் ஆகவே ஆணையர் மேசையின் இந்தப்புறம் அமர்ந்திருக்கிறார். அதே பரிட்சையை அவர்கள் அவருக்கு முன்பாக எழுதிப் தேர்வாகியிருந்தால் அவர்களைப் போலவே அவரும் அந்தப் புறம் உட்கார நேர்ந்திருக்கும். அதிகாரம் என்பது அவ்வளவு தற்செயலான ஒரு விஷயம். ஆகவே அடக்கம் அனைவருக்கும் அவசியம். அடக்கொம் அமரருல் வைய்க்கூம் என்கிறார் அல்லவா திரூபல்லபர்.

அவர் தமிழ் பேசக் கேட்டதும் அதிலும் திருவளுவர் பெயரை அவர் உச்சரித்ததும் பலத்த கைத்தட்டல் எழுந்தது. முறுவலுடன் அதை ஏற்றுக்கொண்டு ஆணையர் தொடர்ந்தார்.

தனித்தனிக் குழுவாய்ச் சென்றாலும் அவரையும் அவர்களில் ஒருவனாய், ஒவ்வொரு குழுவுடனும் கூட வராத இன்னொரு குழுவாய் எண்ணிக்கொள்ளுபடிக் கேட்டுக்கொண்டார். கிடைப்பதைப் பகிர்வோம். பெயராத இடத்தை சடுதியில் கடப்போம் என்பதே பிரச்சனையில்லா பெருவாழ்வுக்கான தாரக மந்திரம் என்றார்.

ஊர் கெட்டுக் கிடக்கிறது. ஆடியோவும் வீடியோவுமாய் ஆளாளுக்கும் செல் போனிலேயே எடுக்கத் தொடங்கி விட்டார்கள். அசம்பாவிதம் ஏதும் நேர்ந்துவிடாமல் பார்ட்டிகளைப் பக்குவமாய்க் கையாள வேண்டும். அப்படி ஏதும் நடந்துவிட்டால் முதலில் உருளப்போவது அவர் தலைதான். ஆகவே, ஏதும் அசம்பாவிதம் நடந்த பிறகு, சம்பவம் நடப்பதற்கு இரண்டு மணி நேரம் முன்னதாக, நெஞ்சு வலி என்று நேராகப் போய் எதாவது மருத்துவமனையில் அட்மிட் ஆகிவிடுவது அப்படி ஒன்றும் முடியாத காரியமில்லை அவருக்கு. இவர் இப்படி இவர் நல்லவர் நம்பிக்கையானவர் என்று எவரையும் நம்ப முடியவில்லை இந்தக் காலத்தில். அவர்கள் அனைவருமே மூத்தவர்கள் அனுபவஸ்தர்கள் எனவே அதிகம் சொல்லத் தேவையில்லை என்றாலும் போகிற இடத்தில் பார்த்து எச்சரிக்கையாய் நடந்து கொள்வது அவசியம் என்று திரும்பத் திரும்ப வலியுறுத்திக்கொண்டு இருந்தார் ஆணையர்.

அவரது அறைக்கு வெளியில் சிவப்பு விளக்கு எரிந்துகொண்டு இருந்தது.

(2015 ஆகஸ்ட்)
கணையாழி



RangaRakes tamilnavarasam.com